www.tamilarangam.net

4

# தேடல்

THEDAL



மாசி 1990

(தேடல் 4)

FEB 1990

இது கலை இலக்கிய மன்ற (கனடா) வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலை இலக்கிய மன்றத்தின் அனுசரணையுடன்

## தேடகம் (நூலகம்)

இலங்கை,இந்தியாவில் இருந்து தமிழ்,ஆங்கில
பத்திரிகைகள்,சஞ்சிகைகள் தருவிக்கப்படுகின்றன.

5497 A,விக்டோரியா அவனியு
அறை இல :222
மொன்றியால்

வகைதுறை வள நிலையம்
566,பாராளுமன்ற வீதி
ரொறன்ரோ

தேடல் பற்றிய சகல தொடர்புகளுக்கும்

**தேடல்**

THEDAL
P.O.BOX 1031
Station "F"
Toronto,M4Y 2T7
Ont,CANADA

**தேடல்**

வார இதழ்

தாயகம்
'உண்மையைத் தேடி'

இது ஒரு ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவன வெளியீடு

கலை இலக்கிய மன்ற வெளியீடு
மாசி 1990(தேடல் 4)

## தேடலுக்காய்....

படைப்புகளும் மறுப்புகளும்
ஆசிரியர் குழு
நிதர்சனம்
ஆனந்த் பிரசாத்
கட்டளைக்காக காத்திருக்கிறேன்
சின்னு(சுவடுகள்)
மானிடக்கம்பங்கள்
பா.அ.ஜயகரன்
தனிமை
ஜோர்ஜ்.இ.குருஷேவ்
அனைத்து எதிரிகளிடமிருந்து
கௌரி
புதைகுழிப் பாடல்
கௌதமன்
கோளறுப்பதிகம்
ரஞ்சகுமார்(திசை)
புதிய பூமி எழுந்து வரட்டும்
மாக்கிரட் வாக்கர்(தாகம்)
மரவள்ளித் தோட்டம்
சபா வசந்தன்
குழந்தைப் பண்ணை
புரோப்(தமிழாக்கம்:மு.சிவா)
சிந்தனையும்,மனமும்,சூழலும்
வ.ந.கிரிதரன்
கனிவுமில்லை கருணையுமில்லை
சி.சிவசேகரன்
தேசிய இனப்பிரச்சனையும் முஸ்லிம் மக்களும்
வ.ஐ.ச.ஜெயபாலன்
சுவடுகள் பற்றி....
ஆ.ர் குழு
எமது குழந்தைகளின்....
குசல் பெரேரா(தமிழாக்கம்:செ.லோகா)
ஒரு மனிதனின்....
செழியன்
முன் அட்டைப்படம்
சௌந்தர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# படைப்புக்களும் மறுப்புகளும்

தாய் நாட்டில் சிலரது ஏகபோக சிந்தனைகளினால் மனிதத்துவத்தின் அடிப்படைகள் மறுக்கப்பட்டு தாய் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட மனிதர்கள்,' எங்கு சென்றாலும் அவர்களின் உணர்வுபூர்வமான செயற்பாடுகள் தொடரவே செய்யும் என்பதற்கு சான்றுபகர்வனவாக,' மேற்குலகின் பல பாகங்களிலும் அகதிகளாக வாழ்ந்து வரும் தமிழர்கள் மத்தியில் உருவாக்கப்பட்டிருக்கும் பல கலை இலக்கிய முயற்சிகள் இருக்கின்றன.எமது தாய் நாட்டில் எம்மவர்களினாலேயே மழுங்கடிக்கப்பட்ட சிந்தனையின் வெளிக்காட்டலின் உத்வேகமே இவ்வரிய முயற்சிகள் ஆகும்.இவ் முயற்சிகளும் இலகுவானதாக வெளிக் கொணரப்படவில்லை. பற்பல தடைகளின் மத்தியில்தான் வெளிக் கொணரப்படுகின்றன.தாய் நாட்டில் எவ்வாறு எழுத்து,கருத்து சுதந்திரங்கள் சிலரால் தடுக்கப்பட்டனவோ அதே பின்னணிகளில் உள்ள சிலர் வெளியுலகிலும் அவ்வாறான செயற்பாடுகளில் இறங்கியிருப்பது கண்டிக்கப்படவேண்டியது.

போராட்ட சீரழிவுகளினால் சிக்குண்டு தவிக்கும் கலை இலக்கிய முயற்சிகள் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.அவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் கலை இலக்கிய ஆவலர்கள் வரவேற்கப்படவேண்டியவர்கள்.சமூகத்தின் ஜதார்த்தங்களுக்கூடாக கலை இலக்கியங்களை இட்டுச்செல்வதென்பது மிகக்கடினமான உழைப்பேயாகும்.இவ்வாறான கடினமுயற்சிகளினால் பல ஈழ நாட்டு எழுத்தாளர்கள்,கலைஞர்கள் போராட்ட சூழ்நிலைகளிலும் மிகத்தரமான படைப்புகளை படைத்துள்ளார்கள்.பல புதிய படைப்பாளிகள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். எம் போராட்ட வரலாற்றில் மிகப்பெரிய பலாபலன் இவ் கலை இலக்கிய படைப்புகள்தான்.சுதந்திரம் என்பது மற்றயவர்களின் சுதந்திரத்தை நேசிப்பதிலும் தங்கியுள்ளது.எனவே மனிதனை சுதந்திரமாக சிந்திக்க விடுங்கள்.சுதந்திரம் பற்றி பேசிக் கொண்டே சுதந்திர மறுப்புகள் வேண்டாம்.என்றும் எம் போராட்டம் அடக்குமுறைகளுக்கு எதிரானதே.

**"சுரங்கதில் தங்கம் இருக்கலாம். அதற்காக, கைகளில் விலங்குடன் செல்ல எமக்கு சம்மதமில்லை"**

_ஆசிரியர் குழு_





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதைகுழிப் பாடல்

அவன் தனியே
அவர்களோ மூவர்
முகம் தெரியாத இருள்
அவர்களுடைய மனதைப்
போல

தன்னுடைய புதைகுழியைத்
தானே வெட்டும் அவலம்
நேர்ந்தபோது
அவன் என்ன
உணர்ந்திருப்பான்
என்பது
வார்த்தைக்குள் அகப்படாத
குரூரம்

அந்தப் புதைகுழியின் மேல்
காற்றில்
உறைந்து போய்
இருக்கின்றன
அவன் இறுதியாகச்
சொன்ன வார்த்தைகள்.

காற்று அவற்றைக்
கொண்டு செல்லாது,
மழையும் சூரியனும்
கிட்டவும் நெருங்கா.



அவன் சொல்லாத
வார்த்தைகளோ
மண்ணுட் போய்
மண்ணிலிருந்து மரத்துட்
போய்
அங்கிருந்து கிளைக்கு
கிளையிலிருந்து இலைக்கு
இலையிலிருந்து காற்றில்
இடையறுமல்
அலையலையாக எழுந்து
கொண்டிருக்கிறது.

அந்தப் புதைகுழியின் மேல்
பிசாசு இல்லை,
தெய்வமும் இல்லை,
நினைவுச் சின்னம் எனவும்
ஒன்றில்லை.

ஆளரவமற்ற இரவுத்
தெருவின்
ஒற்றை விளக்குப் போல
உதிரியாய் ஒரு பட்டிப் பூ
அதன் மீது
காலம் தன்னுடைய கொடூர
நகங்களைப்
பதித்துள்ளது.

அவனுடைய இறுதி
வார்த்தைகளில்
இருந்தது
நமது தேசத்தின் உயிர். . .

கௌதமன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை



# வெளித் தேட்டம்

-சபா வசந்தன்-

"பிள்ளை..! உதில வாற பஸ் எங்க போகுதென்டு பாரணை, வெய்யிலுக்கால வந்தது கண்ணும் தெரியேல்லை ஏனுக்கும் நிப்பாட்டாமல் போறுன், டிப்போ வுக்குப் போறுன் போல, உந்தப்பிரச்சனையளால பஸ்சும் ஒழுங்காய் வாறேல்லை."

தனக்குள் அலுத்தபடி தலையில் கனத்த மரவள்ளிக்கிழங்குக் கூடையை இறக்கி வைத்தாள் சரசு. தாளாத வறுமையின் தழும்புகளாக சுருங்கிய அவளின் கன்னங்கள். அதில் வழிந்தோடிய வியர்வையினைத் தனது முந்தானையால் துடைத்து விட்டுக்கொள்கிறுள். எதிரே கொழுத்தும் வெய்யிலுக்குச் சாட்சியாக கானல் நீர் கனென்று கொண்டிருந்தது.

"ஏனெணை ஆச்சி .உந்தக் காலுக்கொரு செருப்புப் போடக்கூடாதே. ...உந்த நெருப்பு ,வெய்யிலுக்குள்ளால உப்படி நடந்து வாருய்.."

அருகில் நின்ற இளைஞன் ஒருவன் அக்கறையாகக் கேட்டான்.அவனைப் பார்த்தபொழுது சரசுவிற்கு தனது மூத்த மகன் பாலனின் நினைவுதான் வந்தது. பாலன் இப்போது வெளிநாட்டில் இருக்கிறுன்.அவனும் இப்படித்தான். அடிக்கடி அப்படிச்செய்.இப்படிச்செய் என்று கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறுன். சரசு இனி மரவெள்ளிக்கிழங்கு விக்கக்கூடாதாம்.தோட்டக்காணியையும் யாருக்காயினும் குத்தகைக்கு விட்டுவிடட்டாம்.அவள் இனி வெளியில் வெளிக்கிடும்போது வடிவாக உடுப்பு உடுத்திக் கொண்டுதான் வெளிக்கிட வேண்டுமாம்.ஊத்தை உடுப்போடு கிழங்கு கடகத்தை தூக்கிக்கொண்டு திரிவது தனக்கு மரியாதை இல்லையாம். அவன் எழுதிய கடிதத்தை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திக் கொண்டாள்



சரசு.கடகம் வாங்கக் கூட காசில்லாமல் இருந்த நிலைமையை மறந்திட்டான் போலகிடக்கு.

அவளையறியாமலே அவளது இதழோரத்தில் இளநகை ஒன்று தவண்டது.
"என்னெணை...கால் சுடேல்லையோ எண்டு கேட்டா சிரிக்கிறுய்..."
இளைஞன் வியப்புடன் கேட்டான்.

"உதென்ன வெய்யிலெடா தம்பி.ஐம்பது வருசமாய் சுடாத வெய்யில் இண்டைக்கே சுடப்போகுது.அதுமட்டுமில்லை,நாங்கள் இவ்வளவு காலமாய் இந்த மண்ணை நம்பித்தான் சீவிச்சுக்கொண்டுவாறம். எங்கட மண்ணுக்கு துன்பங்களைத் தாங்கித்தான் பழக்கமே தவிர,துன்பங்களைக் குடுத்துப் பழக்கமில்லை....... இப்பத்தைப் பெடி,பெட்டையளுக்குத்தான் எங்கட மண்ணின்ர அருமை தெரியேல்லை."
சரசுவின் வார்த்தைகளில் ஒரு உயிரோட்டம் இருந்தது.அந்த இளைஞன் பதில் பேசவில்லை.இந்தக்கிழவியுடன் வாய்கொடுத்து வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டும் என்று பேசாமல் இருந்து விட்டான் போலும்.

"ஏன் தம்பி நீ இந்த வெளிநாடு ஒண்டுக்கும் போகேல்லையே? "
சரசு சிறிது ஏளனமாகவே கேட்டாள்.

"நான் இப்ப வெளிநாட்டில இருந்துதான் ஆச்சி வந்திருக்கிறன்"

"என்ன...வெளிநாட்டில இருந்து வந்திருக்கிறியோ..?அப்ப ஏன் சாரத்தோடை திரியிறுய்? ஆளைப்பார்த்தா வெளிநாட்டில இருந்து வந்திருக்கிற மாதிரித் தெரியேல்லை.....தம்பி கொஞ்சம் நாட்டுப்பற்று உள்ள ஆள்போல கிடக்கு.. "

சரசுவின் வார்த்தையில் இருந்த ஏளனம் சற்று அதிகரித்தது.

"அந்த அநியாயத்தை ஏனெணை கேக்கிறுய்,வெளிநாட்டில இருந்து வந்திருக்கிற ஆக்களிட்டை இந்த இயக்கப் பெடியள காசு பறிக்கிறுங்களாம்.....உண்மையே?
அதுதான் அப்பர் சொன்னவர் வெளிநாட்டால வந்தமாதிரி காட்டிக் கொள்ள வேண்டாமென்டு"
அந்த இளைஞன் அக்கம் பக்கம் பார்த்து குரலைத்தாழ்த்தி மிகவும் அவதானமாகச் சொன்னுன்.

"அதுசரி உங்கதரவழிக்கு இந்த இயக்கப் பெடியளை ஏதாவது சொல்லாட்டா சோறு இறங்காதே.."
சரசு சற்றுக் கடினமாகச் சொல்லிவிட்டுப் பேச்சை முடித்துக்கொண்டாள்.அவளது சிந்தனை மீண்டும் தன் மகன் பாலனை நோக்கித் திரும்பியது.பாலன் இப்போது எப்படி இருப்பான்?அவனைப் பார்த்துத்தான் எத்தனை வருடங்களாய்விட்டன.இனி எப்போதுதான் அவனைப் பார்க்கப்போகிறேனே?அவளது கலக்கம் நீண்ட ஒரு பெருமூச்சாக வெளிவர,அவளது மௌனத்தைக் கலைத்துக்கொண்டு பஸ் வண்டியொன்று இரைந்தபடி வந்து நின்றுது.சரசு தனது கிழங்குக் கடகத்தைத் தூக்கித் தலையில் வைக்கும்போது அந்த இளைஞன் உதவ முயன்றுன்.ஆனுல் சரசு அவனைத் தடுத்துவிட்டாள். மற்றவர்களின் துணையின்றி நான் இன்னும் நீண்ட தூரம் போகவேண்டும்.அவளது உள்மனம் சொல்லிக் கொண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாட்கள் நகர்ந்து,மாதங்களாகி வருடங்கள் இரண்டு உருண்டோடி விட்டன.இப்போது சரசுவின் மரவள்ளித்தோட்டத்தில் அரை வாசிக்குமேல் அழிக்கப்பட்டு அதில் ஒரு அழகான ஒரு கல் வீடு கட்டப்பட்டிருக்கிறது.அதில் வானொலிப பெட்டி,தொலைக்காட்சிப பெட்டி என்பனவற்றுடன் வேறும பல,அந்தஸ்த்தை காட்டும் அத்தியாவசியமற்ற வசதிகளும் ஆடம்பரமாகச் செய்யப்பட்டிருந்தன. இந்த வசதிகள் எல்லாம் ஏற்பட்டதில் அவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியே என்றாலும் சரசுவின் மனதில்மட்டும் ஏதோ ஒரு இனம் தெரியாத பயம் குடிகொண்டிருந்தது.அது என்ன என்பது அவளுக்கும் தெரியவில்லை. ஆனால்,அவளது பிள்ளைகளின் நடையுடை பாவனைகள் நாளுக்கு நாள் மாறத்தொடங்கின.மகன் பாலன் விருப்பப்படியும்,மற்றப்பிள்ளைகளின் நச்சரிப்பினாலும் சரசு இப்போது மரவள்ளி விற்பதையும் நிறுத்தி விட்டாள்.

"..ம்! சாப்பிடவும் வழியில்லாமல் கிடந்ததுகளுக்கு வந்த காலத்தை பாரன்"
அவர்களின் வசதிகளைக் கண்டு பொறுக்க முடியாத சிலர் இப்படி அவர்கள் கேட்கும்படியாகவே பேசித் தமது ஆதங்கத்தை தீர்த்துக் கொண்டனர்.

"சங்கதி தெரியுமே,பெடியள் வெளியில எண்டவுடன் பெட்டையளுக்கு டொக்டர் மாப்பிள்ளையாமெல்லே பாக்கினம்"

"ஓமாம்,மூத்த பெட்டைக்கு இரண்டு லட்சம் காசும்,ரவுணில வீடும் குடுக்கப் போகினமாம் உண்மையே...! "

ஊரவர்களின் இந்த வெளிப்படையான பேச்சுக்களினால் சரசுவினுடைய பெண்களின் மனங்களும் மாறத்தொடங்கின. சமுதாயத்தில் ஒரு தராதரத்துடன் வாழ வேண்டுமானால் நாமும் இப்படியான ஒரு நிலையை அடைய வேண்டும் என்ற நடுத்தர வர்க்கத்தின் அர்த்தமற்ற அபிலாசைகளினால் அவர்களுடைய மனங்களும் அலைபாயத் தொடங்கின.இவற்றையெல்லாம் எண்ணிக் கலங்கியபடி நடந்துகொண்டிருந்த சரசு.எதிரே சைக்கிளில் வந்திறங்கிய கந்தையா மாஸ்டரைக் கண்டு ஒரு கணம் நின்றாள்.

அந்த ஊரில் கந்தையா மாஸ்டர் மிகவும் நல்ல மனிதர்.ஊரவர்களின் இன்ப துன்பங்களில் தாமாகவே சென்று பங்கெடுத்துக் கொள்பவர்.ஊரவர்கள் அவரிற்குக் கொடுத்த மதிப்பை விட சரசு ஒருபடி அதிகமாகவே அவரிடம் மதிப்பை வைத்திருந்தாள். அதைவிட அவர் பாலனிற்கு சின்ன வயதில் பாடம் சொல்லிக் கொடுத்தவர்.

"என்ன சரசு எங்கேயோ அவசரமாப் போறாப்போல கிடக்கு"

"ஓம் மாஸ்டர் ..... வாற கிழமை இவன் பாலன்ரை பிறந்தநாள் வருகுது
அதுதான் இந்தக் கடிதத்தை உந்தத் தபால் பெட்டியில போடுவமெண்டு போறன்"
இதைக்கேட்டதும் கந்தையா மாஸ்டரின் முகம் சிறிது மாறியது.அதற்கான காரணம் சரசுவிற்கு புரியவில்லை.அவள் அதைப் புரிந்து கொள்ள முயற்சிக்கவும் இல்லை.

"சரி சரசு உதை இஞ்ச கொண்டா நான் வீட்டை போகேக்க போட்டுவிடுறன்... இப்ப உன்னோடை கொஞ்சம் தனியாய் கதைக்க வேணும்..,பெட்டையளெல்லாம் வீட்டை நிற்குதுகளோ..? அல்லது வெளியில எங்கையாவது போய்யிட்டுதுகளோ..?"

"அதுகள் எல்லாம் மாஸ்டர் படத்திற்கு போட்டுதுகள்.ஆடு,மாடு அவித்துக்கட்டக் கூட ஆக்கள் இல்லை"
சரசு அங்கலாய்த்துக் கொண்டாள்.

"சரி இருட்டுறதுக்குள்ள வீட்டுக்கு நட கதைப்பம்"
சரசுவின் கையிலிருந்த கடிதத்தை வாங்கித் தனது சட்டைப்பையில் திணித்தபடி சைக்கிளை உருட்டத் தொடங்கினார் கந்தையா மாஸ்டர்.சரசு அவரைப் பின் தொடர்ந்தாள்.அவரின் சமூக சிந்தனை,அதைசெயற்படுத்தும் விதம்,வாழ்க்கை முறையில் இவர் ஏற்படுத்திக் கொண்ட வரைமுறைகள்,அதனால் வறுமையிலும் அவர் நடத்திய சீரான வாழ்க்கை,பெருமைப்படத்தக்க அவரின் பிள்ளைகள்.எல்லாமே மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டுத்தான்.

அவர்கள் இருவரும் மௌனமாக நடந்து கொண்டிருந்தனர்.சில்லிட்ட மாலைத் தென்றல் அவர்களுடைய தேகங்களை வருடிச்சென்ற போதுதான்,தாம் ஒரு தோட்ட வெளியைக் கடந்து கொண்டிருப்பதை உணர்ந்தார்கள். அப்போது ஓரளவு இருட்டி விட்டது என்றாலும்,தோட்டத்தில் இன்னமும் ஆட்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். அந்திச் சூரியனின் விந்தைக் கதிரொளியில் அந்த உண்மை உழைப்பாளிகளின் பாறை உடலில் அரும்பியிருந்த முத்துப் போன்ற வியர்வைத்துளிகள் மினுமினுத்தன.இந்த உழைப்பாளிகள் தாம் பிறந்த காலம் தொட்டு இன்றுவரை உழைப்பைத்தவிர வேறொன்றையும் அறியாதவர்கள்.எம் சமுதாயத்தில் உள்ள வர்க்க முரண்பாடுகளின் பாதகமான பக்கத்தைச் சார்ந்தவர்கள்.ஆகையால், பரம்பரை,பரம்பரையாக அவர்கள் அழுத கண்ணீரும்,சிந்திய வியர்வையும்தான் எம் செம்மண்ணைச் செழிப்பாக்கியதோ என்னனவோ? இவர்களுடைய துயரத்தை காணச் சகிக்காமல் அடிவானத்தில் சூரியன் சிறைப்பட்டுக் கொண்டிருந்தான்.ஆனால் இவர்கள் மட்டும் விடியலுக்கு இன்னும் வெகுதூரம் இல்லை என்ற இடதுசாரிகளின் எழுச்சிப் பேச்சுக்களில் நம்பி இன்னும் உழைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களின் அவலத்தை எண்ணிப் பெருமூச்சு விட்ட கந்தையா மாஸ்டர் ஒரு வாய்க்காலைக் கடக்க முற்பட்டபோது அவருடைய ஒரு கால் சேற்றுக்குள் சென்றுவிட்டது.ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.குதிக் காலிலும் வேட்டியின் ஓரத்திலும் ஒட்டிக்கொண்ட அச்செம்மண்ணை புற்களில் துடைத்துக் கொண்ட போது அவரது உள்மனம் எண்ணிக்கொண்டது.
"இந்த மண்ணின்ரை அருமை தெரியாமத்தானே எத்தினை பிள்ளையள் அநியாயமாய் அழிஞ்சு போகுதுகள்"
விஞ்ஞான வளர்ச்சியும். நாகரீகவளர்ச்சியும் உண்மையான உடலுழைப்பின் பெருமையினையும்,அவசியத்தையும் பெருமளவு குறைத்து விட்டன என்பது அவரது வாதம்.அதில் ஓரளவு உண்மையும் இருக்கத்தான் செய்கிறது.

ஆனால் இவையெல்லாவற்றிற்கும் மாறாக,தன் குடும்பம்,பிள்ளைகள் என்ற வட்டத்திற்குள் நின்று





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு, கந்தையா மாஸ்டர் கதைக்கப் போவதாகச் சொன்னதைப்பற்றியே யோசித்துக கொண்டு நடந்தாள் சரசு.

"ஒரு வேளை ஏதாவது கலியாண விசயமாய் இருக்குமோ?என்ரை மூத்தவள் உமாவை,கொழும்பில பாங்கில வேலை செய்யிற தன்ரை இளையமகன் குமாருக்கு கட்ட விருப்பம் எண்டு விதானையாரோட கதைச்சவராம்.ஒரு வேளை அதுவா இருக்குமா?அப்படியெண்டால் சந்தோசம்தான்.அதோட வாற சித்திரைக்குள்ள எப்படியும் அவளுக்கு கலியாணத்தை முடிச்சுப் போடவேனும்.தமக்கைக்குக் கலியாணம் என்டால பாலனும் கட்டாயம் வருவான்.பிள்ளை உவ்வளவு காசை உழைச்சுத் தந்துபோட்டு அங்கை அனாதையாக் கிடக்குது..." சரசுவின் நாம்பன் மாடு கத்திய சத்தத்தில் அவளுடைய சிந்தனை கலந்தது.

"இதென்ன பொழுதுபட்டு எவ்வளவு நேரமாச்சு,விளக்கு ஒண்டும் எரியக்காணேல்லை"

"இருங்கோ மாஸ்டர் சாமி அறை விளக்கையாவது கொழுத்திப் போட்டு வாறன்"

அவசர அவசரமாக வீட்டுக்குள் நுழைந்து விளக்குகளை ஏற்றிவிட்டு,கையில் ஒரு தேனீர்க் கோப்பையுடன் வெளியே வந்தாள் சரசு.அதை வாங்கிக் கொள்ள அவர் எழுந்தபோது,வாசற்படிக்கு நேரே மாட்டப்பட்டிருந்த பாலனின் படம் அவள் கண்களிற்குத் தெரிந்தது. அவன் நவநாகரீக உடைகளுடனும், பரட்டைத்தலையுடனும்,கழுத்தில் ஐந்தாறு தங்கச் சங்கிலியுடனும் சட்டைப் பொத்தானை திறந்துவிட்டபடி நின்றான்.அதைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தார் கந்தையா மாஸ்டர்.சிறுவயதில் பாலன் பாடசாலை மைதானத்தில்,கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளத்தோடு மிடுக்காய் ஓடித் திரிந்த காட்சி அவர் கண்களில் நிழலாடியது.இலேசாக ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு சரசுவைப் பார்த்தார். ஆனால் சரசுவின் முகத்தில் எந்த உணர்ச்சிகளும் தென்படவில்லை. அவள் எதிரே இருந்த அழகிய ரோஜாச் செடிக்கு அருகில் காய்ந்த வாழைநாரைப்போல களைப்புடன் அமர்ந்திருந்தாள்.

கையிலிருந்த தேனீரை உறிஞ்சியபடி மெதுவாக ஆரம்பித்தார் கந்தையா மாஸ்டர்.

"சரசு....... இவன் பாலன் எப்ப கடைசியா கடிதம் போட்டவன்"

"அது மாஸ்டர் இப்ப ஒரு ஆறு மாசத்திற்கு மேல் இருக்கும்,அவன் கடைசியாக இந்தியாவில வந்து நிண்டு கொண்டு ஒரு கடிதம் போட்டவன்.அதுக்குப் பிறகு சகோதரிமார் போட்ட கடிதத்திற்குக் கூட ஒரு மறுமொழியும் போடேல்லை....ஏன் மாஸ்டர் ஏதாவது பிரச்சனையோ..?"

சரசு சற்று பதட்டமாகவே கேட்டாள்.

"ஓம் சரசு அவன் ஒரு சின்னப் பிரச்சனையில மாட்டுப்பட்டுட்டான் போலத் தெரியுது ......"

மீதமிருந்த தேனீரையும் உறிஞ்சி கோப்பையைக் கீழே வைத்துவிட்டு,சுற்றும்முற்றும் பார்த்து குரலை மிகவும் தாழ்த்தியபடி மேலே தொடர்ந்தார் கந்தையா மாஸ்டர்.

"இவன் இந்தியாவில இருந்து திரும்பிப் போகேக்க ஏதோ கொண்டு போனவனாம். அதனால் பொலிஸ் அவனை விசாரிக்க கொண்டு போட்டாங்களாம்."

அவள் எத்தனையோ அதிர்ச்சிகளை சந்தித்து இருந்தாலும் அதிர்ச்சியின் உண்மையான அர்த்தமும் தாக்கமும் இன்றுதான் அவளுக்கு விளங்கியது. என்றாலும் அவள் தன் சுயநினைவை இழக்கவில்லை.அத்துடன் விசயங்கள் சில அவளுக்கு மெல்ல மெல்ல விளங்கத் தொடங்கின.

"பாலன் நேர்த்திக்கடன் எண்டு சொல்லி அடிக்கடி இந்தியாவுக்கு வந்து போகேக்கையே யோசிச்சனான் இப்படி ஏதாவது வில்லங்கம் வருமெண்டு"

பாலன் கருவாகக் குடிகொண்டிருந்த அவளின் அடிவயிறு ஆயுதக்களமாக அவதிப்பட்டது.வயிற்றை கையால் அழுத்தியபடி மாஸ்டரைப் பார்த்து ஆறுதலாக கேட்டாள் சரசு

"ஏன் மாஸ்டர்.... விசாரனை முடிஞ்சுதாமே?. ....."

மாஸ்டர் சிறிது தடுமாறிப் போனார். சரசுவை நேருக்கு நேர் பார்க்க அவருக்கு தைரியமில்லை.அருகிலிருந்த செவ்வரத்தை இலையொன்றைப் பிடுங்கி அதை சிறிதாகப் பிய்த்துக் கீழே போட்டபடி,அடித்தொண்டையால் மிக நிதானமாச் சொன்னார்.

"ஓம் சரசு..... இருபத்தைஞ்சு வருசம் தீர்ந்திருக்காம். என்டாலும் இவன்ரை நடத்தையை பார்த்து ஒரு பத்துப் பதினைஞ்சு வருசத்தில வெளியில விட்டுவாங்கள் எண்டு நினைக்கிறன். நீ ஒண்டுக்கும் யோசிக்காதை சரசு...."

அதற்குப் பிறகு அவர் அங்கு இருக்க விரும்பவில்லை.மெதுவாக எழுந்து சைக்கிளை உருட்டத் தொடங்கினார்.படலை அடித்து மூடிய சத்தம் அவர் போய் விட்டார் என்பதை உணர்த்தியது..கிரீச். ..கிரீச்.... என்ற அவரது சைக்கிள் சத்தம் மெதுவாகக் குறைந்து மறைந்தபோது சரசு முந்தானையை எடுத்துத் தோளில் போர்த்துக் கொண்டு மெல்ல எழுந்தாள.

இந்தச் சமூகம் தனது குடும்பத்தை இனி எவ்வாறு பார்க்கப் போகிறது என்ற காட்சி அவள் கண்முன்னே வந்து கலங்க வைத்ததது.

"எதிரே எல்லை காணமுடியாத பரந்த வெளி அதிலே அவள் தலைகுனிந்தபடி தனித்து நிற்கிறாள்.இவ்வளவு காலமும் அவர்களது வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்பட்ட இந்தச் சமூகத்தின் சுட்டுவிரல் அவள் முன்னே நீட்டப்பட்டிருந்தது. சங்கடப்பட்டுச் சற்று நிமிர்ந்து பார்க்கிறாள் சரசு. முன்வீட்டுப பவளம், தோட்டக்காரச் செல்லப்பு, சங்கக்கடைக் கணேசன், கோயிற்குருக்கள், விதானையார், உடையார், இவர்களுடன் இளசும்,முதுசுமாக இன்னும் பலர் அவளைச் சுற்றி நின்று கைகொட்டிச் சிரித்தனர்.

"அதுசரி... களவெடுத்த காசிலயே இவ்வளவு நாளும் எடுப்பாத் திரிஞ்சவை....."

"மூஞ்சைக்குப் பவுடரும், கிழமைக்கு இரண்டு படமும் இல்லாமல் அவவின்ர குமருகள் இருக்கமாட்டினம். இனி என்ன செய்யப்போயினமாம்?..."

"கட்டினால் டொக்டர் அல்லது எஞ்சினியர் மாப்பிளையைத்தான் கட்டிறதெண்டெல்லே நின்டவை...இனி எவனையாவது கூட்டிக் கொண்டு ஓடவேண்டியது தான்..."

சரசு மிகவும் கூனிக்குறுகிப்போகிறாள். யார் இவர்கள்...?ஓ..இவர்கள்தான் சமூகமோ.ஆம்...வாழ்ந்தால் எரிந்தும், வீழ்தால் சிரித்தும் மகிழும் சமூகம் இதுதான்.நான் எதற்காக இந்தச் சமூகத்திற்குப்பயப்படவேண்டும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்கள் எனக்கு என்ன நன்மை செய்தார்கள்? சரசு இவர்களை அலட்சியம் செய்தவாறு மீண்டும் நிமிர்ந்து பார்க்கிறாள்!

"அதுகளை ஏன் குற்றம் சொல்லுறியள். வெளிநாடுகளில் உந்தப் பெடியளெல்லாம் என்னென்ன செய்யிதுகள் எண்டு அதுகளுக்கு என்ன தெரியும்" எவ்வளவு காலமாய் அந்தக் குடும்பம் இந்த ஊரில் இருக்கு. அதுகளால இந்த ஊருக்கு ஏதாவது கெட்ட பேர் வந்ததே...ஏய் குருக்கள் கோயில் நகைகள் களவுபோய்,உம்மை பொலிஸ் கொண்டுபோய் வைச்சிருக்கேக்க,சரசுவின் புருசன்தான் தன்ரை காணியை ஈடுவைச்சு உம்மை பிணை எடுத்தது.இப்ப அந்த நன்றியை மறந்து நீரே அதுகளைப்பற்றிக் கேவலமாக கதைக்கிறது அவ்வளவு நல்லாய் இல்ல கண்டீரோ..."

அங்கு கந்தையா மாஸ்டரும் வேறு சிலரும் ஊர் "பெரியவர்கள்" சிலருக்குச் சமாதானம் சொல்லிக்கொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் சரசுவின் கண்கள் பனித்தன.ஓ...... இவர்களைப்போன்ற நல்ல மனிதர்களும் இதே சமூகத்தில்தான் வாழ்கிறார்கள்.ஆகவே சமூகத்தைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. தனிமனிதனால் உருவானதுதான் சமூகம்.ஆனால் தனிமனிதர்களின் தவறுகளுக்கு சமூகம் பொறுப்பல்ல. ஏனென்றால்,எம் சமூக அமைப்புமுறையில் மாற்றப் படக்கூடிய விடயங்கள் பல இருந்தாலும்,இதே சமூகம்தான் எண்ணற்ற அறிஞர்களையும் ,கலைஞர்களையும்,புரட்சியாளர்களையும் உருவாக்கியிருக்கின்றது.ஆகவே சமூகத்தில் உள்ள குறைபாடுகளுக்காக ஒட்டு மொத்தமாகச் சமூகத்தை ஒதுக்க நினைப்பது,தலையிடிக்காகத் தலையை வெட்டுவதுபோல் ஆகிவிடும்.**மேலை நாட்டு நாகரீக மோகம், நுகர் பண்ட வெறி,குறுகியகாலத்தில் பெரும் பொருள் சேர்க்கும் பேராசை இவைகளினால் பாலன் தன் வாழ்க்கையை அழித்துக்கொண்டான்.**சரசு அவனுக்காக அதிகம் கவலைப்படவில்லை.ஆனால்,எம் இனத்தை பண்பான இனம் என்று பெயர் வாங்க வைத்த மகத்தான சமூக வரைமுறைகளை மறந்து,நுகர்பண்ட வெறிக்கு அடிமைப்பட்டு,நாகரீக வளர்ச்சி என்ற பெயரில் சிறிது சிறிதாக நரகமாகிக்கொண்டிருக்கும் அவளுடைய பெண்கள்....!

ஆம் எம் சந்ததி சாக்கடையில் வீழ்ந்த பின் சமூகத்தைக் குறை கூறி என்ன லாபம்..?

சரசு வானத்தை நிமிர்ந்து பார்த்தாள். அங்கு நட்சத்திரங்கள் எதுவுமின்றி முழுநிலவு தனியாக நின்றது.

"மழை வரும்போல கிடக்கு "

சரசு தனக்குள் எண்ணிக்கொண்டாள் இரண்டு வருடமாக பயிர் செய்யாமல் தரிசாகக் கிடந்த தோட்டக்காணிக்குள் மெதுவாக கால்களை எடுத்து வைக்கிறாள். அந்த உயிரோட்டமான மண் அவளுடைய கால்களில் பட்டதும் உடலும்,உள்ளமும் புதுத்தென்பை பெற்றன.கால்களால் மண்ணைத்தடவியவாறு தனக்குள் சொல்லிக்கொண்டாள் சரசு

"நாளைக்கு எப்படியும் கொத்தத்தொடங்கினால் வாறகிழமை மரவள்ளிக்கட்டையள் நடலாம்."

வீட்டுக் கொல்லைப் புறமாகச் சென்று விளக்கைப் போட்டுப் பார்க்கிறாள்.அங்கே அவளது மரவள்ளிக்கிழங்குக் கடகம் ஒரு கடின உழைப்பாளிக்குள்ள மிடுக்குடன் அவளைப் பார்த்துச் சிரித்தது.உன்னை என்றும் கைவிட மாட்டேன் என்றது. அவள் அதை எடுத்து ஒரு தாய்மை உணர்வுடன் தடவிக்கொள்கிறாள். பிள்ளைகளின் பேராசை,பெற்றவர்களின் இயலாமை,சமூகத்தின் அறிவின்மை. ஓ.....அவள் நீண்ட தூரம் செல்லவேண்டும் தனியாக! எங்கோ ஒரு பறவை பரிதாபமாகச் சத்தமிட்டுச் சென்றது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

# மேற்கிலிருந்து................

மேற்கு நாடுகளில் வாழும் தமிழர்களிடையே பல இலக்கிய முயற்சிகள் உருவாகியிருக்கிறது.இம் முயற்சிகள் என்னென்ன என்பது உங்களுக்கு தெரியுமா?நாம் அறிந்த சில சஞ்சிகைகளை இங்கு தருகின்றோம்.

**தூண்டில் _ மேற்கு ஜேர்மனி**
**சுவடுகள் _ நோர்வே**
**அஆஇ _ நெதர்லாந்து**
**தேடல் _ பிரான்ஸ்**
**மனிதம் _ சுவிஸ்லாந்து**
**பார்வை _ கனடா**
**தமிழ் எழில் _ கனடா**
**வீணைக் கொடி _ கனடா**
**தேடல் _ கனடா**
**தாயகம் _ கனடா (பத்திரிகை)**
**நாயகன் _ கனடா (பத்திரிகை)**
**தமிழ் முரசு _ கனடா (பத்திரிகை)**

இயக்கப் பிரசுரங்கள் பலவும் வெளிவருகிறது.அவைகள் இங்கு குறிப்பிடப்படவில்லை.இன்னும் சஞ்சிகைகள் இருப்பின் அறியத்தாருங்கள் (THEDAL, P.O. BOX. 1031,STATION "F", ONT, M4Y-2T7.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனையும், மனமும், சூழலும்

_வ.ந. கிரிதரன்._

***"மனிதன் சூழ்நிலையின் கைதி"*** என்றொரு கூற்று நிலவுகின்றது. கூர்ந்து கவனிப்போமாயின், ஒரு மனிதன் வாழ்வின் சகல படிகளையும் நிர்ணயிப்பது அவன் வாழும் சமுதாயத்தில் நிலவிடும் புறச் சூழல்தான். இச்சூழலின் தாக்கம் அல்லது பாதிப்பு ஒவ்வொரு மனிதன் மீதும் ஒரே விதமான தாக்கத்தினை வெளிப்படுத்துவதில்லை. மாறாக அவனது உடனடிச் சூழலான குடும்பச் சூழல், சிந்தனையின் தரம் (அகச்சூழல்) என்பனவிற்கேற்பவே இப்பாதிப்பும் அவனிடத்தில் ஏற்படுத்தும் விளைவுகளும் காணப்படுகின்றன.

வர்க்கங்களால், ஏற்றத்தாழ்வுகளால் பிளவுண்டு கிடக்கும் புறச்சூழல் மனிதனில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் மிகவும் வலியவை. பெரும்பாலான தெளிவுள்ள மனிதர்களே இச்சூழலின் தாக்குதல்களிற்கு ஈடுகொடுக்க முடியாமல் நீரோட்டத்தில் அள்ளுப்பட்டுச் செல்லும் கட்டையைப்போல் அள்ளுண்டு போகும்போது சாதாரண மனிதர்களின் நிலை என்ன? இத்தகைய பாதிப்புக்களிலிருந்து தப்பிப் பிழைத்த ஒரு சிலரே சூழலை மீறிய சரித்திர புருஷர்களாக, மானிட வழிகாட்டிகளாக உருவாகுகின்றார்கள். இவ்வாறு மனிதனைப் பலவழிகளிலும் ஆட்டிப்படைக்கும் இம் மனதினை, மனோவியல் அறிஞரான சிக்மண்ட் பிராய்ட் இரு பகுதிகளாகப் பிரிக்கின்றார்.

***1. உணர்வுமனம் (அல்லது புறமனம்)***

***2. உணர்விற்கப்பாற்பட்ட மனம் (அக அல்லது ஆழ்மனம்)***

மனிதனின் மனதின் முக்கால் வாசிப்பகுதியை உள்ளடக்கியிருப்பது இந்த உணர்ச்சிற்கப்பாற்பட்ட ஆழ்மனமே. சகல விதமான அபிலாசைகள், எதிர்பார்ப்புக்களைப் புதைத்து வைத்துள்ளன. இந்த ஆழ்மனம்தான் மனிதனது சகல பிரச்சினைகளிற்கும் காரணம். பகுத்தறிவு பேசுவது மனிதனின் உணர்வுமனம். ஆனல் அவனது உணர்விற்கப்பாற்பட்ட மனமான ஆழ்மனதினில் அவன்பேசும் பகுத்தறிவுக்கேற்ற கொள்கைகள் எண்ணங்கள் பதிந்திராவிட்டால்.... அவன் எவ்வளவு பகுத்தறிவு வாதம் புரிந்தும் பயனில்லை.

இன்றைய பெரும்பாலான சமய, அரசியல் தலைவர்களுட்பட சாதாரண மக்களினதும் நிலை இதுதான். உணர்ச்சிகரமாகப் பேசுவதொன்று, செய்வதொன்றாக இருப்பதைப் பார்த்துப் பார்த்து அலுத்துக்கிடக்கின்றோமே. இந்நிலைக்குக் காரணம் இந்தப் புற, ஆழ் மனங்களிற்கிடையிலான போராட்டம் தான். புறச்சூழல், அகச்சூழலின் விளைவுகள் மனிதனின் புறமனத்தினில் ஏற்படுத்தும் பாதிப்பு



செயலுருப் பெற வேண்டுமானல் அவனது ஆழ்மனமும், புறமனமும் ஒன்ருக இயங்க வேண்டியது அவசியம்.

மனிதனின் மனம் பற்றிய ஆய்வுகளில் பல புரட்சிகரமான கோட்பாடுகளைக் கண்டுபிடித்தவர் சிக்மனட் பிராய்ட். வீயன்னுவில் மருத்துவப் பட்டப்படிப்பை முடித்து வைத்தியராக கடமையாற்றிய சிக்மன் பிராய்ட்டினைப் பாதித்த முக்கிய விடயங்களாகப் பின்வருவனவற்றை கூறலாம். இவையே இவரது பல மனம் பற்றிய கோட்பாடுகளிற்குக் காரணமாகவிருந்தன.

(1) டார்வின் கூர்ப்புக் கொள்கை. (இக் கொள்கையின் அறிமுகத்திற்கு முன்னர் மனிதனை ஏனைய மிருகங்களில் இருந்தும் பிரித்து மனிதனும் ஏனைய மிருகங்களில் ஒன்ருகக் கருதப்பட்டதோடு மட்டுமல்ல, மனிதன் பற்றிய ஆய்வுகளும் இயற்கை விஞ்ஞான முறைகளிற்கு ஏற்ப மேற்கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகள் உருவாகின)

(2) கவுட்டாவ் பெச்னரின் (Gustav Fechneo- பிரபல்யமான ஜேர்மன் தத்துவ ஞானியுமாவார்.) கண்டுபிடிப்பான உளவியல் விஞ்ஞானம் (Science of Psychology) இக் கண்டுபிடிப்பானது மனமும் விஞ்ஞான பூர்வமாக ஆய்வு செய்யப்பட முடியுமென்பதை நிலை நாட்டியது.

(3) நவீன பௌதீகத்தின் புதிய கண்டுபிடிப்புக்களான சக்தி பற்றிய குவாண்டம் கொள்கையும் சிக்மண்ட் பிராய்டின் மனம் பற்றிய ஆய்வுகளிற்கு பெரிதும் உதவின. (இக்குவாண்டம் கொள்கை சக்திச் சொட்டுக் கொள்கையின் படி சக்தியும் பொருளைப்போல் அளக்க முடியுமெனவும், சக்தியை அழிக்க முடியாதெனவும் அறியப்பட்டது. மேலும் இப் புதிய கண்டுபிடிப்புகளின் வாயிலாக மனிதனும் சக்தியின் வடிவம் (Energy System) என்பதும், எந்த விதிகள் பௌதீகத்தில் உள்ளனவோ அதே விதிகளிற்கமையவே மனிதனும் இயங்குகிறுன் என்பதும் நிரூபணமாயிற்று.)

இதுதவிர சிக்மண்ட் பிராய்டின் வளர்ச்சிக்கு அவரது வைத்தியத் தொழிலும், அவரது ஆழ்ந்த அறிவும் பெரிதும் காரணமாகவிருந்தன. இக்கட்டுரையின் நோக்கம் சிக்மன் பிராய்டின் ஆற்றலைப் பற்றியோ அல்லது அவரது மனம் பற்றிய கோட்பாடுகளை விரிவாக ஆராய்வதோ அல்ல. இதன் நோக்கம் வாசகர்களிற்கு பிராய்டின் மனம் பற்றிய கோட்பாடுகளை மிக இலகுவான முறையில் அறிமுகம் செய்து வைப்பதே ஆகும். எனவே விடயத்திற்கு வருவோம்.

சிக்மண் பிராய்டின் முக்கிய கண்டுபிடிப்பு இயக்கவியல் மனோவியல் அல்லது இயக்க உளவியல் (Dynamic Pshcholohy) ஆகும். இயக்கவியல் விதிகளை மனிதனின் ஆளுமைக்கும் (Personality) அவனது உடலிற்கும் பாவிக்க முடியுமென்பதைக் கண்டுபிடித்ததே இவரது மிகப்பெரிய சாதனையாகும். நவீன விஞ்ஞான வளர்ச்சியிலும் இது ஒரு மைல்கல்லே. இயக்கவியல் உளவியல் (Dynamic Pshcholohy) மனிதனின் ஆளுமை (Personality) யில் ஏற்படுத்தும் சக்திமாற்றங்களை விளக்குவதாகும். இங்கு மனிதனின் ஆளுமை (Personality) என நான் கூறுவது ஒரு மனிதனின் குணவியல்புகளையே குறிக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிராய்டின் கருத்துப்படி ஒரு மனிதனின் மன இயல்புகள் (ஆளுமை Personality) மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அல்லது அவனது மன இயல்புகள் மூன்று வடிவங்களில் செயல்படுவதாகக் கூறலாம்.

**(1) உணர்வுகள் உந்தும் இயல்பு (ID)**
**(2) நான் என்னும் முனைப்பு. (Ego)**
**(3) அதியுயர் மனக் கூறு. (Super ego)**

(1) உணர்வுகள் உந்தும் இயல்பு (ID)

இந்த உணர்வு உந்தும் இயல்பு (ID) என்றால் என்ன? மனிதனில் ஏற்படும் சகலவிதமான ஆசைகள், உணர்ச்சிகள் (உதாரணமாக பசி உணர்வு, பாலியல் உணர்வு என்பவற்றைக் கூறலாம்...) என்பவற்றின் காரணம் இந்த உணர்வுகள் உந்தும் இயல்பு (ID) தான். இவ்வாறு உருவாகும் உணர்வுகளிற்கு வடிகாலை நாடுவதுதான் இந்த உணர்வு உந்தும் இயல்பின் பிரதான செயற்பாடு.

பிராய்டின் கருத்துப்படி உணர்வுகள் உந்தும் இயல்பு (ID) செயற்பாடினது ஒரு மனிதனின் வாழ்வின் பிரதான நோக்கமான இன்பத்தை அடையும் நோக்கினைப் (Pleasure Principle) பூர்த்தி செய்வதாகவே உள்ளது

ஆனால் உணர்வுகள் உந்தும் இயல்பின் (ID) பிரதான குறைபாடு என்ன வென்றால்.... இது வெளி உலகைப்பற்றி, யதார்த்த நிலைமைகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. உதாரணமாக பசி உணர்வால் பீடிக்கப்பட்டுள்ள குழந்தையொன்றை நோக்குவோம்.

முதலாவதாக இத்தகைய பசி உணர்வு (Hungry Instinct) எவ்விதம் குழந்தையிடம் உருவாகின்றதென்ற கேள்விக்கு பிராய்டின் விடை, இவ்விதமான உள்ளுணர்வுகள் மனிதனின் பிறவியிலேயே உருவாகுவன என்பதுதான்.

பசியால் பீடிக்கப்பட்டுள்ள குழந்தை அதனைப் பூர்த்தி செய்வதற்காக அழுகின்றது. இவ்விதம் அழும் குழந்தையில் ஏற்படும் பாதிப்புக்கள் அதன் உணர்வுகள் உந்தும் இயல்பு (ID) வளர்ச்சிக்கு மேலும் உதவுகின்றன.

இவ்விதம் அழும் குழந்தையின் உணர்வுகள் உந்தும் இயல்பு (ID) இருவிதமான செயல்முறைகள் ஏற்படுகின்றன.

(1) ஆரம்பப் படி அல்லது முறை (Primasy Procers) இக்கட்டமானது குழந்தையின் மனதினில் அப் பசி உணர்வைத் தீர்க்கக் கூடிய உணவுபற்றிய பிம்பத்தை (Image) இனங்காட்டி விடுகின்றது. இவ்விதம் உணர்ச்சிகளிற்கு வடிகாலான தீர்வினை மனதினில் உருவாக்கும் பிம்பத்தை (Image) பிராய்ட் ஆசையைப் பூர்த்தி செய்யும் செயல்பாடு (Wish Fulfillment) என்கிறார். பிராய்டின் கருத்துப்படி நாம் காணும் கனவுகள் இத்தகைய ஆசையைப் பூர்த்தி செய்யும் (Wish Fulfillment) செயற்பாடுகளே.

முன்பே கூறியபடி இவ் உணர்வு உந்தும் இயல்பு (ID) உள்ளத்தில்ஆசையைப் பூர்த்தி செய்யத் தோன்றும் பிம்பத்தினையும் (Subfective memory image) உண்மையான பூர்த்தி செய்யும் பொருளினையும் (உதாரணமாக குழந்தையின் விடயத்தில்) உணவினையும் (Obgective perception of the Idal obgect) வேறு படுத்திப் பார்க்கும்



தன்மையற்றதாகவே உள்ளது.

அதிலும் இத்தகைய ஆசையைப் பூர்த்தி செய்யும் பொருளின் பிம்பத்தினை மனதினில் இனங்கானுவதால் மட்டும் அக் குழந்தையின் பசி தீர்ந்து போவதில்லை. உண்மையான உணவினை அக்குழந்தைக்கு ஊட்டுவதால் மட்டுமே அதன் பசி தீர்ந்து விடும்.

பசியால் அழும் குழந்தையின் பசியைத் தீர்க்கும் உணவின் தோற்றம் உள்ளத்தில் உருவாகுவது முதலாவது படியென்றால் (Primary Process) அவ்வுணவினைப் பூர்த்தி செய்வதற்கு இரண்டாவது படியொன்றும் தேவைப்படுகின்றது. இரண்டாவது படி (Secondary Process) மனதின் மற்றெரு இயல்பான "நான்" என்னும் முனைப்புடன் (Ego) சம்பந்தப்பட்டுள்ளது.

(2) நான் என்னும் முனைப்பு. (Ega)

உணர்வு உந்தும் இயல்பானது (ID) பாலியல் உணர்வு அல்லது பசி உணர்வு அல்லது வேறு ஏதாவது உணர்வுகள் தோன்றும் பொழுது அதனைத் தீர்ப்பதற்கு தவிக்குறது. அது வெளி உலகைப்பற்றி எதனைப்பற்றியுமே கவலைப்படுவதில்லை. அது தன்னுணர்வுகளிற்கு வடிகாலாக மனதினில் தோன்றும் பிம்பங்களையோ, அல்லது அதன் உண்மை வடிவினையோ வேறுபடுத்திப்பார்க்கும் தன்மையும் அற்றதாகவே எண்ணி மனதும் மயங்கி விடுகின்றது. அதனால்தான் பசியால் அழும் குழந்தை கைக்குக் கிடைத்ததை வாயினுள் போட்டுவிடுகின்றது.

அச்சந்தர்ப்பத்தில்தான் மனதின் ஆளுமையை உருவாக்கும் மற்றெரு இயல்பான நான் என்னும் முனைப்பு (Ego) முக்கியத்துவம் பெறுகின்றது. அதற்கும் உணர்வு உந்தும் இயல்பிற்கும் இடையிலான பிரதானமான வேறுபாடு உலகைப்பற்றி யதார்த்த நிலமையைப் பற்றிக் கவனத்தில் கொள்கின்றது. உணர்வு உந்தும் இயல்போ (ID) இதற்கு மாறாக இன்பத்தை அடையும் குறிக்கோள் (Pleasaur Prensuple) பற்றியே கவனத்தில் கொள்கிறது. இந்த நான் என்னும் முனைப்பே (Ego) உணர்வு உந்தும் இயல்பினால் (Id) உருவான ஆசைகள் உணர்வுகளிற்கு தீர்வினை வடிகாலினை அடையும் வழிமுறைகளைக் கூறுகின்றது.உண்மையில் இந்த நான் என்னும் முனைப்பு (Ego) வழிமுறைகளைத் தான் கூறுகின்றதே ஒழிய அம்முறை சரியா அல்லது பிழையா, அல்லது நன்மை பயக்குமா, தீமையைத் தருமா என்பது பற்றிப் பாகுபடுத்திப் பார்க்கும் தன்மை அற்றதாகவே காணப்படுகிறது.

இன் நிலையில்தான் மனம் செயல்படும் முறைகளில் மூன்றாவதான அதியுயர் மனக்கூறு (super Ego) அல்லது மேல் மனக்கூறு முக்கிய பங்கினை வகிக்கத் தொடங்குகிறது. அதற்கு முன்னர் ஆரம்பத்தில் கூறியபடி பசியால் அழும் குழந்தையின் மனதினில் முதல் கட்டமாக (Primary Process) அப் பசியைத் தீர்ப்பதற்குரிய பொருளின் பிம்பமொன்று உருவாகுவதாகக் குறிப்பிட்டோமல்லவா... அது பற்றிச் சிறிது பார்ப்போம். இம்முதல் கட்டத்துடன் குழந்தையின் பசி தீர்ந்து விடுவதில்லை.

அதன் அடுத்த இரண்டாவது கட்டம்தான் (Secondary Procers) அதனை அடைவதற்குரிய வழிகளைக் கூறுவதாகும். இதுவே நான் என்னும் முனைப்பு (Ego) என்பதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயற்பாடகவுமுள்ளது. உண்மையில் இவ் இரண்டாவது கட்டமான பிரச்சினைகளிற்குத் தீர்வு காண்பதேயாகும். (Problem Solving) இனிஅடுத்த பகுதியான அதியுயர்மனக் கூறு (Superego)பற்றிச் சிறிது பார்ப்போம்.உண்மையில் பாலியல் உணர்வில் பாதிக்கப்பட்ட ஒருவனின் நிலையைப் பார்ப்போம். அவனில் கிளர்ந்தெழும் உணர்வுகள், உணர்வு உந்தும் இயல்பின் (ஐடு) விளைவால் ஏற்பட்டவை. அதனை அடைவதற்குரிய வழிமுறைகளைக் கூறி அவனைச் சிறிதே தடுத்துவைப்பது மனத்தின் நான் என்னும் முனைப்பின் (ஈகோ) தன்மையாகும். உதாரணமாக பாலியல் உணர்வுகளால் பீடிக்கப்பட்ட ஒருவன் ஒரு பெண்ணுடன் உறவு கொள்ள விழைகின்றான். ஆனால் அப்படி முயலும்போதுஅவன் பலாத்காரமாகவும் தன் ஆசையை நிறைவேற்ற முயலலாம். அல்லது சமூகத்தில் நிலவும் சட்ட திட்டங்களிற்கமைவாகவும் பூர்த்தி செய்ய முடியும். இச் சட்டத்தில்தான் மனத்தில் இயல்பு செயல்படும் முறையான அதியுயர் மனக்கூறு (Super Ego) அவனிற்கு அவன்தான் ஆசையைப் பூர்த்தி செய்யும் வழிமுறைகளில் உள்ள நன்மை தீமைகளைப் புரிய வைக்கின்றது.

இவ் அதியுயர்வு மனக்கூறானது (Superego) மனிதனின் குழந்தைப் பருவத்திலிருந்தே பெற்றோர்கள், ஆசிரியர்கள், மத குருமார்கள் முதலான அவன் மேல் ஆதிக்கம் செலுத்தும் மனிதர்களினூடாகவும், சமூதாயத்தில் நிலவும் சட்ட திட்டங்களின் விளைவாகவும் பாதிக்கப்படுவதன் விளைவாகவே, அப்பாதிப்புக்களிற்கேற்ப நன்மை தீமைகளை பாகுபடுத்திப் பார்க்கின்றது.

ஆக மொத்தத்தில் ஒரு மனிதனின் ஆளுமையை (Personality) நிர்ணயிப்பவை உணர்வு உந்தும் இயல்பிற்கும் (ID) நான் என்னும் முனைப்பிற்கும் (Ego) அதியுயர் மனக் கூறிற்கும் (Superego) இடையில் ஏற்படும் மோதல்களின் விளைவே என்று கூறலாம். இம்மூன்று போக்குகளிற்கிடையிலும் ஒரு வித இணக்கத்தைக் கண்ட மனிதன் அமைதியான, சீரான வாழ்வை வாழ்க்கையில் இணக்கமற்றவர்களின் வாழ்வில் ஒரு வித ஒழுங்கற்ற சீரற்ற நிலைமையைக் காணக் கூடியதாகவுள்ளது. ஒரு சிலரிடத்தில் உணர்வு உந்தும் இயல்பின் (ID) தாக்கம் கூடிக் காணப்படும். இவர்களிற்கு உதாரணமாக திருடர்களைக், கற்பழிப்புக்காரரைக் கூறலாம். ஆனால் அதே சமயம் இன்னுமொன்றையும் நினைவில் கொள்ளவேண்டும். குற்றச் செயல்கள் புரிவோரிடையில் மட்டும்தான் இவ் உணர்வு உந்தும் இயல்பு (ID) கூடிக்காணப்படும் என்பதில்லை.

உதாரணமாக அடக்கு ஒடுக்கு முறைகளால் பாதிக்கப்பட்ட நாட்டில் உள்ள ஒருவனின் நெஞ்சில் நிலவும் அநீதிகளிற்கெதிராக ஆவேசம் சீறிப் பெருகும். இந்நிலையில் அம்மனிதன் அவ் அடக்கு முறைகளிலிருந்து விடுதலையினைநாடிக் கிளர்ந்தெழும் போது அவன் மனத்தில் உணர்வு உந்தும் இயல்பின் (ID) தாக்கமே கூடுதலாக உள்ளது. அச்சமயம் அவன் அச்சமுதாயத்தில் நிலவும் சட்டதிட்டங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. தன் உயிரையும் வெறுத்துப் போராட்டத்தில் அவன் குதிக்கிறான். இவ்விதம்



உருவாக்கப்பட்ட போராட்டம் தொடர்ந்து வளர்ச்சி பெற்றுச் செல்கின்றது. இக்கட்டத்தில் நிலைமை வேறுபடுகின்றது. விடுதலைப் போராட்டம் சரியானது என்ற கருத்து அடக்கப்படும் மக்களிடையே பரவி விடுகின்றது. இந்நிலையில் போராளியின் மனமானது செயல்படும் முறையானது உணர்வு உந்தும் இயல்பு (ID) நான் என்னும் முனைப்பு (Ego) "அதியுயர்மனக்கூறு (Superego) என்பவற்றின் மோதலின் விளைவாகவே முதிர்ச்சி பெறுகின்றது. தங்களது புரட்சிகரப் போர்முறைச் சித்தாந்தங்களிற்கேற்ப வழிமுறைகளை, நன்மை, தீமைகளை அவர்கள் வரித்துக் கொள்கின்றார்கள்.

**மனச்சக்தி (Psychic Energy)**

:

இவ்விதம் மனத்தின் செயற்பாடுகளைப் புரிவதற்குரிய சக்தி எவ்விதம் தோன்றுகின்றது? சிக்மன் பிரய்ட் இச் சக்தியை மனச்சக்தி (Psychic Energy) என்கின்றார்? மின்சக்தி, காந்த சக்தி, வெப்பச்சக்தியைப் போல் இம் மனச்சக்தி (Psychic Energy) சக்தியின் ஒரு வடிவமே. உடலினை இயக்கும் உடற் சக்திதான் (Bodily Energy) தேவைப்படும் போதெல்லாம் மனச்சக்தியாகவும் மாறிக் கொள்கின்றது.என்று கருதுகிறார் சிக்மண்ட் பிராயிட். பொறிச் சக்தி (Mechanical Energy) பொறிகளை இயக்கப் பயன் படுவது போல், மின்சக்தி மின்சாரத்தைத் தந்து புகைவண்டியை ஓடச் செய்வது போல் அல்லது மின்குமிழை எரியச் செய்வது போல், இம்மனச்சக்தியும் (Psychic Energy) உளவியல் வேலைகளான சிந்தித்தல், உணர்தல், ஞாபகப்படுத்தல் முதலானவற்றைச் செய்வதற்கு உதவுகின்றது. ஆனால் எவ்விதம் இச்சக்தியானது, எந்நேரமும் தேவைகளிற்கேற்ப உடற்சக்தியாகவும் மாறுதலடைகின்றதென்பது இது வரை அறியப்படவில்லை.

முடிவாக இக்கட்டுரையின் நோக்கம் மனிதர்களாகிய எம் மன இயல்புகள் செயல்படும் போக்குக்கள் பற்றிய சிக்மன் பிராய்டின் கருத்துகோள்களை இலகுவான தமிழில் அறிமுகம் செய்வதேயாகும்.

அன்றாடம் பல்வேறு வகைப்பட்ட நெருக்கடிகளிற் குள்ளாகித் தத்தளிக்கும் மனிதர்களாகிய நாம் அந்நெருக்கடிகளிலிருந்து தப்புவதற்கு மூடத்தனமான கோட்பாடுகளைத் துணைக்கழைப்பதன் மூலம் மனப்பாரங்களைச் சிறிதே இறக்கி வைத்து ஆறுதலடைந்துவிட்டு மீண்டும் அப்பாரங்களைச் சுமந்து செல்வதற்குப்பதிலாக எம்மன இயல்புகளை, அது செயற்படுத்தும் போக்குகளை அறிவதன் மூலம் மேலும் மேலும் எம்மை விளங்கிக் கொள்ள முயல வேண்டும்


இவ்விதம் எம்மை நாமே அறிந்து கொள்வதன் மூலம், சுத்திகரித்துக் கொள்வதன் மூலம் புறச்சூழலின் பாதிப்புகளிற்குச் சரியாக முகம் கொடுத்துச் செயற்படக் கூடிய அகச் சூழலை உருவாக்குவதன் மூலம் எம்வாழ்வு பயன்பெறுவது மட்டுமல்ல, எம் சமுதாயப் பங்களிப்பினையும் செய்யக் கூடியதாக இருக்கும்.

***எடுகோள்: சிக்மன் பிரய்ட்***
***(SIGMUND FREUD)***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



-ரஞ்சகுமார்-

(சென்றஇதழ்த் தொடர்ச்சி)

என்னுடைய அம்மாவின் தகப்பனுர் இன்னும் ஜீவிய வந்தராய் தாடியை கோதிக் கொண்டிருக்கும் எனது அப்பு. ஒருதரம் ஒரு பேய்க்கு துவரந்தடியால் விளாசியிருக்கிறுர். அந்தப்பேய் வஞ்சம் மறக்காமல் சில இரவுகளில் ஞாபகமாய் வந்து அப்புவின் மென்னியைத் திருகுமாம். உடலேப் பெரும் பாறையாக அமுத்துமாம். முறித்தெடுக்குமாம். அப்பு சில இரவுகளில் "ஊ ஊ" எனத் திணறுவதையும்,வாய் பிதற்றுவதையும் நானே நேரில் கண்டிருக்கிறேன். தொடர்ந்து சிலநாட்களாக அப்புவுக்கு காய்ச்சல் காயும். அப்புவுக்கும் "இங்கிலீசு மருந்து"க்கும் ஒத்துவராது. காய்ச்சல் குடி நீரை அம்மா சண்டச் சுண்டக் காய்ச்சி ஒரு துண்டு பனங்கட்டியுடன் கொடுப்பாள். அப்பாவோ, நல்ல தென்னஞ் சாரயத்தில் "ஒரு அரை எடுத்து வந்து அம்மாவிடம் கொடுத்து விடுவார். கிழவனுர் ஆசையால் கிளாசை பதபக்குவமாக பற்றுவார்.

"போடா அங்காலே....... எளிய வடுவா, வாய் பாக்காமல் ..." என்று என்னை விரட்டுவார். பிறகு, தொண்டையைச் செருமுவதும், நாவைச் சப்புக் கொட்டுவதும் கேட்கும்.

சற்று நேரத்தில் "இஞ்சை வாடா மேனே..." என கிழவனுர் ஆசையாகக் கூப்பிடுவார். அவரது முகத்திலிருந்தும் தாடியிலிருந்தும் சாராய நெடி அடிக்கும் ஒளியிழந்த கண்கள் சிமிட்டும். பல்விழுந்த பொக்கை வாய் இனிக்கும். துவரந்தடியால் பேய்க்கு விளாசிய கதை நூறுவது தடவைக்கு மேல் எனக்கு விஸ்தாரமாகச் சொல்லப்படும்.



கேட்கக் கேட்க அலுக்காத கதை. அப்பு கதை சொல்லும் பாணியே அலாதி. அடிக்கடி நான் ஊம்" கொட்டி எனது ஆர்வத்தைக் காட்டி, அவரது வீரத்தை மெச்ச வேண்டியது அவசியம்ல

அப்பு கல்வீட்டினுள் படுப்பது கிடையாது. வேப்பமரத்தின் குளிர் நிழலின் கீழ் கிழவனுர் தமக்காக ஒரு கொட்டில் போட்டு வைத்திருக்கிறுர். தீராந்திகளில் கலப்பையும், பிக்கானும், நுகக்காலும், நாலைந்து துவரந்தடிகளும், இரும்புப் பூண் இட்ட கரிய ஏழு முள்ளுக் கொட்டனும் சொருகப்பட்டிருக்கும். பாம்புகள் மாதிரி மாடுகளின் கழுத்துச் சங்கிலிகள் வளைந்தபடி தூங்கும். ஒரு பழைய உறுதியான நார்ப்பெட்டிக்குள் லாடங்கள், மாட்டின் கழுத்துச் சதங்கைகள், இன்னும் பல கிழவனுரின் அரிய பொக்கிஷங்கள் எல்லாம் உண்டு. அவையெல்லாம் அவருக்கு மிக இனியவை, அவரது வாலிபத்தின் நினைவுகளைத் துாண்டுவனவல்லவா? அவை எவ்வளவு கதைகளை அறிந்திருக்கும்? எவ்வளவு பேய்களுடன் அப்புவுடன் தோளோடு தோள் நின்று போராடியிருக்கும்!

"அப்பு நான் நல்ல வடக்கன் மாடுகள் ஓறிணை வைச்சிருந்தனுன்... என்னை விட உயரம் ... மாவெள்ளை நிறம்... ஒரு நாளைக்கு ஒரு கடகம் பருத்திக் கொட்டையும் புண்ணுக்கும் வேணும் ..." என்று கதை தொடங்கும்.

எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது. எங்களது வீட்டிற்கு அப்போ மதில் கட்டப்பட வில்லை. அலம்பரும் பனையோலையும் கொண்டு மிக நெருக்கமாகவும் கலை நேர்த்தியுடனும் அடைக்கப்பட்ட அழகிய வேலிதான் இருந்தது. அந்தக்காலத்தில் எங்களூரில் தோட்டவேலையும் வயல் வேலையும் குறைந்தவெயில் மிகுந்த ஆனி, ஆடி, மாதங்களில் எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து "அலம்பல் காட்டுக்கு " வண்டி பூட்டி போவர்கள். போக முதல் வைரவர் கோயிலில் பொங்கல். ஒரு கிழமையோ பத்து நாட்களோ பயணம். பானை சட்டிகள், அரிசி, நல்லெண்ணெய், பருப்பு, கருவாட்டுடன் போவர்களாம்.

ஒரு தடவை மற்றவர்களை விட நல்ல அலம்பர் வெட்ட வேண்டும் என்ற அவாவில் அப்பு காட்டுக்குள் வெகு துாரம் போய் விட்டார். அப்புவுக்கு அப்போ நல்ல வாலிபம். நல்ல உடல் கட்டு. கல்யாணமாகி, எனது அம்மா பிறந்து அப்போதுதான் தவளுகிறுளாம். அப்புவின் வாழ்க்கையில் உல்லாசம் வீசுகின்ற காலம். நல்ல பாரமாக அலம்பர் வெட்டி விட்டார். மற்றவர்களுக்கெல்லாம் பொறுமை அப்புவையும் அவரது பிரசித்தி பெற்ற "வடக்கன்" களையும் விட்டு விட்டு அவர்கள் முன்னே வண்டிகளை ஓட்டிச் சென்று விட்டார்கள். அப்பு இரண்டு மூன்று "கட்டை" பின் தங்கி விட்டார். அக்காலங்களில் அப்புவுக்குப் பயமே கிடையாது. வாலிபம் அல்லவா?

நிலவு பகல் போலக் காய்கிறது. அப்போ தார் ரோட்டுக்கள் கிடையாது. குண்டுங் குழியும் மக்கி ரோட்டுக்களும், வண்டிப் பாதைகளும் தான். வண்டி நிறைந்தபாரம். "வடக்கன்"கள் முக்கித்தக்கி இழுக்கின்றன. வண்டி அப்படியும் இப்படியுமாக இலேசாகத் தாலாட்டுகிறது. பாதையின் இருபுறமும் தாழம் புதர்கள் மலர்ந்து "கம்"மென்ற வாசனை. கண்டல் மரங்கள் நீருக்குள் முக்குளித்து, நிமிர்ந்தன. நீரில் கண்டல் சாயம் போல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனோரம்யமான சிவந்த நிறம் காட்டுகிறது. காற்று வேறு மெல்ல வீசிற்று. தனிமை தந்த சலிப்பும் ஏக்கமும் வாட்டுகிறது. அப்புவுக்கு பாட்டு வந்தது. பாடத் தொடங்கினார்.

வயல் வெளிகளும் சிறுபற்றைகளும் மாறி மாறி வருகின்றன. அப்புவை நோக்கிக் கையசைத்து பின்னால் போய் நின்று திரும்பிப் பார்த்தன. வயல் வெளிகளினூடாக யாரோ ஒருவன் நொண்டி நொண்டி வருகிறான் செம்பாட்டு மண்ணில் விழுந்து புரண்டவன் போல பழுப்பு நிற வேட்டி கட்டியிருக்கிறான். வந்தவன், வாய்பேசாமல் பின்னணியத்தில் பிடித்து தூங்குகிறான். பின் பாரம் மிக அதிகரித்து மாடுகளை தூக்க எத்தனித்தது. மாடுகளின் வாயிலிருந்து வெண்ணுரை கக்கிற்று. அப்பு திட்டினார்.

"வேசை பிள்ளை, எட்டா கையை... துவரங்கம்பாலை வெளுப்பன்" அவன் முன்னால் வந்தான். வந்தவன், நுகத்தடியில் ஏறி உட்கார்ந்தான். அவனுடலிலிருந்து கெட்ட நாற்றம் மலநாற்றம் வீசிற்று. மாடுகள் வெருண்டடித்தன. கதறின, பாரம் தாங்காமல் முன்னங்கால்களை மடித்து விழுந்தன அப்புவுக்குச் சினம் பொங்கிற்று.

"எளிய வடுவா..." என உறுமியபடி, ஆசனத்திலிருந்தபடியே எட்டி அவனது முதுகில் துவரங்கம்பால் சாத்தினார். கூர்மையான குரலில் ஓலமெழுப்பியபடி அவன் பாய்ந்து இறங்கினான். அப்போது, கோடை வானம் கிழியும்படி ஒரு மின்னல் தெறித்தது. மின்னல் ஒளியில் வந்தவனை அப்பு நன்றாகக் கண்டார் வானத்துக்கும் பூமிக்குமாக அவன் பிரமாண்டமாக வளர்ந்து கொண்டிருந்தான். சில நொடி கழித்து பெரும் இடியோசை கேட்டது. அத்துடன் கூடவே அப்புவின் நெஞ்சில் பலத்த உதை கிடைத்தது. வண்டியின் துலாவில் அப்பு மயங்கிச் சாய்ந்தார். எப்படி வீடு வந்து சேர்ந்தோமென அப்புவுக்கு, இப்போதும் தெரியாதாம். அதெல்லாம் அவரது பாதை பழகிய அருமையான வடக்கன் மாடுகளின் மகிமை என நன்றியுடன் சொல்லுவார்.

"நீ பேயைக் கண்டா என்னடா செய்வாய்?" என்று ஏளனத்தனமாய்க் கேட்பார்.

"பயத்திலை கழிஞ்சு போடுவாய்" என பொக்கை வாய் சிரிக்கும்.

"இப்ப இந்த மெஷினுகள் வயலுகளுக்கை ஒண்டு பாதி சாமமெண்டும் பாராமல் உழுது உழுது பேய் பிசாசெல்லாம் எந்தப்பக்கம் போனதெண்டு சொல்லாமல் போவிட்டுது" என மிக வருத்தத்துடன் முத்தாய்ப்பு வைப்பார்.

இதையெல்லாம் நான் சொல்ல சொல்ல தேவன் படுத்தபடி கேட்டுக் கொண்டிருந்தான். நான் மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டிருந்தேன். வெளியேயிருந்து இரவின் சூக்குமமான மெல்லிய சந்தடிகள் கேட்டன. இருந்தாற் போல், ஒரு நாய் ஊளையிட்டழுதது. பிறகு தெரு நாய்களும் வீட்டு நாய்களும் ஒன்றாய்ச் சேர்ந்து பெருங்குரலில் குரைத்தன எங்களது வீட்டின் முன்புறமாக சில நாய்கள் பாய்ந்தடித்து ஓடிய அரவத்தை தெளிவாகக் கேட்டோம்.

ஒரு வெடிச்சத்தம்..... பிறகு சலனங்கள் அடங்கின. மயான அமைதி.

ஜன்னலைத் திறந்து பார்த்தோம். தெருவில் சிலர் கனமாக நடந்து போவதைக் கண்டோம். தெருவில் இரண்டு ஓரங்களினாலும் அவர்கள் வரிசையாகப் போயினர். நிழல்கள் அசைவது போல அவர்கள் அரவமின்றிப் போயினர். சூழல் முழுவதும் அச்சப்படும் படியான ஒரு தோற்றம் ஏற்பட்டது. யாரோ ஒருவன் பாடினான் போலும். அர்த்தம் புரியாத வேற்று மொழியில் ஒரு முரடான கரகரத்த குரல்.... ஆனால் ஆத்மார்த்தமாக உணர்ச்சியைச் சிந்தும் குரல் பாடிற்று. அனேகமாக அது ஒரு விரகந்தெறிக்கும் காதல் பாடல்.

விளக்குகளை அணைத்து விட்டு சிறு பெருமூச்சுகளுடன் படுத்தோம். சற்று நேரத்திலிருந்து இன்னொரு வெடிச்சத்தம் கேட்டது.

விடிந்தது. தேவன் மேலும் சில நாட்கள் என்னுடன் தங்க விரும்புவதாகச் சொன்னான். எனது சைக்கிளை சில நாட்களுக்கு இரவல் தரும்படியும் கோரினான்.

மிகச் சில நாட்களே என்னுடன் தங்கினான். நன்கு இருட்டிய பிறகு, சாப்பாட்டுப் பார்சலுடனும், அலைந்து திரிந்த களைப்புடனும் வருவான். இந்தச் சில நாட்களில் தேவனது பல நண்பர்கள் எனக்கு அறிமுகமானார்கள்.

வீட்டில் ஒரு விசித்திரமான விரும்பத்தகாத மாற்றம் ஏற்பட்டிருந்ததை உணர்ந்தேன். இப்போ, வாடைக்காற்று மாறி சோளகம் புறப்பட்டுவிட்டது. இரவு நேரங்களில் எனக்கு தெளிவற்ற கனவுகளும், விவரிக்க முடியாத பயப் பிராந்திகளும் ஏற்பட்டன. வெளியே உக்கிரமாகச் சோளகம் வீசிற்று.

ஜன்னல்களும், கதவுகளும் "தடபட"வென தாமே திறந்து அடித்துக் கொண்டன. யாரோ முனகுவதாயும், அங்கும் மிங்கும் நடமாடுவதாயும், தோன்றியது. சில வேளைகளில் குளியலறையில் நீர் ஓடும் சத்தம் கூடக் கேட்டது. எழுந்து போகத் துணிவில்லாது போர்வையால் முகத்தை மூடியபடி படுத்துக் கிடப்பேன்.

ஒரு தரம், ஒரு கனவு கண்டேன்.

தேவனை யாரோ சிலர் கூட்டிக் கொண்டு போவது போல தெளிவற்ற காட்சி அது மார்கழி மாதமா? ஒரே பனிப்புகார் தேவன் மறுபடியும் மெலிந்திருக்கிறான் அவனது மேலில் சேட் இல்லை வலையை தோள்கள் மீது போட்டிருக்கிறான். கிழிந்து போன பழைய சாரன் உடுத்தியிருக்கிறான். அவனுக்குக் கால்கள் இல்லை. அந்தரத்தில் தொங்குகிறான். ஒரு நிறைந்த நீர் நிலைப்பக்கமான அவர்கள் போகையில், தேவன் நீருக்குள் இறங்க ஆரம்பித்தான். அவர்கள் "அடே தம்பி. .... வாடா...." என நைச்சியம் பண்ணும் குரலில் கூவி அழைத்தனர்.

அவன் மேலும் நீருக்குள் இறங்குகிறான். சாரனை கழற்றி தலையில் முட்டாசு கட்டிக் கொள்கிறான். திருநீறு பூசிக் கொள்கிறான். ஏதோ முணுமுணுக்கிறான். அவர்கள் கைகளை வீசி வீசி அவனைப் பயமுறுத்த எத்தனிக்கின்றனர். மல நாற்றமா? அல்லது பிணம் கருகும் நெடியா? அது மார்கழி மாதப்பனியா, அல்லது ஊர்கள் எல்லாம் சுட்டெரிக்கப்படும் புகையா? எனக்கு மூச்சு முட்டுகிறது. ஒன்றுமே தெளிவாகத் தெரிய மாட்டேன் என்கிறது.

மிகப் பிரயாசைப்பட்டு கண்விழித்தேன். உடல் வியர்த்திருந்தது. மிகத்தாகமாக இருந்தது. நீர்க்குவளை இருந்த பக்கம் கைகளைத் துழாவி, அதை இருட்டில் நிலத்தில் உருட்டி உடைத்தேன்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்த நாள் காலையில், தேவனின் நண்பன் ஒருவன் என்னைத்தேடி வந்தான். தேவனைக் கண்டாயா, என வினவினான். மேலும் சில நாட்கள் கழித்து இன்னொருவன் வந்தான். இரண்டொருநாள் கழித்து இரண்டுபேர் வந்து தேவனை விசாரித்தார்கள். அதற்குப் பிறகு நான் தேவனைக் காணவில்லை. அத்துடன் நான் வீடு மாறி விட்டேன். பேய்கள் பற்றி நான் மிகவும் அஞ்சுகிறேன். நடு இரவுகளில் நிம்மதியின்றி தூக்கத்துக்கு போகிறேன். நடு இரவில் விழித்தெழுந்து தேவனை நினைவுபடுத்த முயற்சித்தவாறு, நெடுநேரம் புகைபிடிக்கிறேன்.

(முற்றும்)

# வன்மையாகக் கண்டிக்கிறோம்

தேடல் இரண்டாவது இதழின் பின் அட்டையில் வெளியான இரண்டு புகைப்படங்கள் வாசகர் மத்தியில் பல்வேறுபட்ட, சர்ச்சைக்குரிய கருத்துக்களை தோற்றுவித்திருந்தன. இப்படங்கள் ஏன் பிரசுரிக்கப்பட்டன என்ற எமது கருத்தை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்விரு படங்களும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அராஜகங்களை நியாயப்படுத்துவதற்காகவோ அவர்களது பிரச்சாரத்துக்கு உதவியாகவோ, நாம் அப்படங்களை பிரசுரிக்கவில்லை. மாறாக இந்திய ஆக்கிரமிப்பு ராணுவமும் அதன் ஆதரவு அமைப்புகளும் சக போராளிகள் மீதும் மக்கள் மீதும் மேற்கொண்ட அராஜகத்தின் சான்றே அப்புகைப்படங்கள்.விடுதலைப் புலிகளும் இதே முறையான அராஜகங்களைத்தான் சக போராளி அமைப்புகள் மீதும் நடாத்திவருகிறது. அடக்குமுறைகள் எவ்வகையில் வரினும் அதை சுட்டிக்காட்டுவதும் அதற்காய் போராடுவதும் எமது தேவை.அதன் வகையில்தான் அப்புகைப்படங்கள் பிரசுரமாகின.எவரையும் வக்காலத்து வாங்கும் நோக்கம் எமக்கில்லை.அண்மையில் வெளியான "உலகத்தமிழர்" எனும் புலிகளின் பிரச்சாரப் பத்திரிகை நாம் வெளியிட்ட அவ்விரு புகைப்படங்களையும் பிரசுரித்திருந்தது.இது தொடர்பாக எம்மிடம் எதுவிதமான அனுமதியும் இவர்கள் பெறவில்லை.இத்தகைய இவர்களது செய்கையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.இப் படங்களைப் பிரசுரமாக்கி தமது கொலைக் கரங்களை மறைக்க எண்ணிய இவர்களது செய்கையையிட்டு மனம் வருந்துகிறோம்.

—ஆ.ர் குழு—



# அனைத்து எதிரிகளிடமிருந்தும்

என் பாசமுள்ள ஈழ தேச மக்களே
உங்களோடு ஒரு கணம்!
நான் பேசிமுடிக்குமுன்
எனது உயிரும் பறிக்கப்படலாம்.
ஆயினும்
நாளையும் இதேபோல்
ஆயிரம் தோழர்கள்
எனது குரலுடன் பேச வருவர்.

எமது வீதிகளில்
இராணுவ ரக்குகளும்
கவச வண்டிகளும்
செல்லாதிருக்கலாம்.

கறுப்பு உடைகளும்,காக்கி
உடைகளும்
சப்பாத்து தடங்களும்
பதியாது இருக்கலாம்
ஆனாலும்
இன்றும் எமது வீதிகளெங்கும்
ஒன்றாக.....
பத்தாக........
நூறாக........
மக்களை நேசித்த போராளிகளும்
ஏன்?
மக்களும் கூடத்தான்.
ஈழத்து வீதிகளெங்கும்
பிணமாய்ச் சரிவர்.

இரத்தம் சொட்ட
அரை குறை உயிருடன்
ரயர்களின் தீயில்
எறியப்படுவர் எரிக்கப்படுவர்
சாம்பராயல்ல.

பூசா முகாமின்
சித்திரவதைகளும்
வெலிக்கடை சிறையின்
கொடிய கொலைகளும்
புதிதாய் இங்கும்
தினமும் தொடரும்
இது ஏன்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏ.கே 47 ற்கும் எம் 16 ற்கும்
வேறுபாட்டை
அது வெடிக்கும் ஓசையைக்
கொண்டே
தரம் பிரிக்க
எமது சிறார்கள்
கற்றுக் கொண்ட பின்னரும்
நீங்களோ இன்னமும்
எதிரிகளையும்,நண்பர்களையும்
இனங்காணத் தவறுவதால்
இவர்களின்
துவக்குகள் குறிபார்ப்பது
இனவெறி அரசின்
இராணுவ இலக்குகளை மட்டும்
என்றிருந்தீர்
ஆனால்
அவைகள் எமது
முதுகுகளையும் குறிபார்க்கின்றது.

என் நேசமுள்ள மக்களே!!
தினமும்
தெரிந்தும், தெரியாமலும்
இயக்க வெறிக்கும்
எதிர்ப்புரட்சியாளர்க்கும்
பலியாகி
புதையுண்டு போகும் _ எம்
செந்தோழர்களின்
இரத்தம் தோய்ந்த உடல்களை
தழுவித் தழுவி
சிவந்துபோன என்
கரங்களை உயர்த்தி
நான் சொல்வது ஒன்றேயொன்று தான்
நமது மொழியை_
பேசுவதால் மட்டும்
நமக்கு யாரும்_
நண்பர்களாக முடியாது
நம்மை நாமே காத்துக் கொள்வோம்
ஆயுதங்கள்
கை மாறவேண்டியதல்லாம்
அனைத்து எதிரிகளிடமுமிருந்துதான்.

(நன்றி:சோகங்களிலும் துயரமானது)

**கௌரி**



# தேடல் விமர்சனக் கூட்டம்

மூன்றுவது தேடல் விமர்சனக் கூட்டம் 1990 மாசி 4ம் திகதி ஞாயிற்றுக் கிழமை 4மணி தொடக்கம் 7 மணி வரையும் இடம்பெற்றது.இவ் விமர்சனக்கூட்டத்திற்கு நாற்பது பேர்வரையிலான இலக்கிய ஆவலர்கள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.பல இலக்கிய ஆவலர்களின ஒன்று கூடல் களமாக அன்றைய கூட்டம் இருந்தது.அன்றைய தினம் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் சாராம்சத்தை உங்களுக்குத் தருகிறோம்.

(1) தேடல் இரண்டில் வெளியிடப்பட்ட படங்கள் பக்க சார்பானவை

(2) வெளியிடப்படும் புதுக்கவிதைகள் இலகு நடையில் இருப்பின் சாதாரண வாசகர்களின் மத்தியிலும் சென்றடையும்.

(3) ஆசிரியர் தலையங்கம் மேலோட்டமாக இருக்கிறது. தலையங்கத்தில் விடயங்களை ஆழமாக ஆராய்ந்தால் சிறப்பாக இருக்கும்.

(4) எதிரியுடன் கொண்டாட்டம் என்ற கட்டுரையில் வரலாற்று ரீதியான பல சம்பங்கள் கைவிடப்பட்டிருந்தது.இவ்வகையான கட்டுரைகள் வாசகர் மத்தியில் பிழையான அறிவை ஏற்படுத்தும்.

(5) ஒரு துரோகியின் இறுதிக்கணங்கள் சிறுகதை மிகச் சிறப்பாக இருந்தது.கமோன் சிறி லங்கா சிறுகதைக்குறிய அம்சங்களை இழந்ததாக காணப்பட்டது.கதையின் ஊடகம் நன்று.


(6) கூடியளவு ஆக்கங்கள் பெறப்படவேண்டும்.மறுபிரசுரங்கள் தேவையின் நிமித்தம் செய்யப்படவேண்டும்.புதிய எழுத்தாளர்களுக்கு தேடலில் களம் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும்.

**தனியே சடமாய் வாழ்வதை விடவும்**
**பயன்பட்டுப்போவது பாக்கியமானதே**
**_ஹம்சத்வனி_**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிதர்சனம்

தத்துவங்களால்
தத்தெடுக்கப்பட்டவர்களுக்கும்
தத்துவங்களிலிருந்து
தப்பித்து
வந்தவர்களுக்குமிடையே
தர்மயுத்தம் நடக்கிறது!
முரண்பாடுகள்;
சரிவுகள்;
சலிப்புகள்;
சிலர் தலைமறைவு .....
பலர் தலைகள்மறைவு .

நண்பனே!
காற்று எனது
கவிதைகளைச்
சுமந்துகொண்டு
கைவீசி நடக்கும்!

சிருஷ்டிகளைச்
சீவியத்தில் நேசித்தவன்
மரணத்தின் பின்
சிருஷ்டிக்கப்படுகிறான்!
தோழமையை நேசித்தவன்
தோள்களில்
சுமக்கப்படும்போதுதான்
உயிர்த்தெழுகிறான்.
சிறகுகளை
உதிர்த்துவிட்ட பிறகுதான்
பறக்கவே ஆரம்பிக்கிறான்!
ஆம்!
இந்த ஆயுதவேதங்களால்
வரையறுக்கப்பட்ட
துப்பாக்கித் தீர்வுகள்
துர்ப்பாக்கியமானது!
இருப்பினும்
இருப்போம், இருப்போம்!
காற்றிலிருக்கும்
எனது சொற்களை
காலம் மீட்டெடுக்கும்!!!

_ஆனந்த் பிரசாத்_

www.tamilarangam.net

# எமது குழந்தைகளின் எதிர்காலம் எங்கே?

**சிங்கள மூலம்; குசல் பெரேரா**
**தமிழாக்கம்; செ. லோகநாதன்**

கல்வியைப் பெறுவது ஒவ்வொருவரதும், அனைவரதும் அடிப்படை உரிமை என்பதை மீண்டும் மீண்டும் ஞாபகப் படுத்தவேண்டிய அவசியமில்லை. இதனை மறந்தவர்களுக்கு காலத்துக்கு காலம் நடைபெறும் தேர்தல்களின் போது ஞாபகப்படுத்தப் படுகிறது. தேர்தல் பிரச்சாரங்கள் எவ்வளவு தூரம் ஏமாற்றாக இருந்தாலும் கூட, அளிக்கப்படும் தேர்தல் வாக்குறுதிகளில் கல்விக்கான உரிமையை பூரணமாக வழங்குவதும் உள்ளடக்கப்படுகிறது. கல்விக்கான உரிமையை யாராலும் நிராகரிக்க முடியாததனாலேயே **அனைத்து மாணவ மாணவிகளுக்கும் 11 வருடம் கட்டாயப் பொதுக் கல்வி வழங்குவதற்கும், பாடசாலைகளுக்கு சமூகமளிப்போர் தொகையை அதிகரிப்பதற்கும் விசேட கவனம் செலுத்தப்படும்.** என ஐ.தே. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் (12பக்கம்) குறிப்பிட்டுள்ளது. (இது 1988 மார்கழி ஜனாதிபதி தேர்தலுக்காகவும் 1989 பெப்ரவரி பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்காகவும் வெளியிடப்பட்டது.)

இத்தேர்தல் வாக்குறுதியை வழங்கும் போது, கடந்த வருடம் இறுதி அரைப்பகுதி எமது நாட்டின் பாடசாலைக் கல்வியானது. குறிப்பிடத்தக்க அளவில் சீர்குலைந்தும், வீழ்ச்சி அடைந்தும் இருந்த காலமாகும். பாடசாலை மாணவர்கள் பலர் அகால மரணம் அடைந்ததையும் அனைவரும் அறிந்திருந்தனர். இக்காரணங்களினால் பாடசாலைக் கல்வி தொடர்பாக இம்முறை வழங்கப்பட்ட வாக்குறுதியானது, அதற்கு முந்திய தேர்தல்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளைவிட முக்கியத்துவமானதாகவும், பெறுமதியானதாகவும் அமைந்திருந்தது.

ஜனவரி மாதம் பாடசாலை ஆரம்பமானபோது பெற்றோர் மகிழ்ச்சியடைந்தனர். ஜனாதிபதி தேர்தலின் பின்னரேற்பட்ட ஸ்தம்பித நிலையை என்றும் நிலைக்கும் சமாதானமாக மாற்றுவதற்கு ஐ. தே.க வினர் மக்களிடம் வரம் கேட்டதோடு எவ்வித இடையூறுமின்றி பாடசாலையை நடாத்துவதாகவும் அழுத்திக் கூறப்பட்டது. பொதுத் தேர்தலின் பின்னர் ஏற்பட்ட ஸ்தம்பித நிலை இன்றைய ஜனாதிபதியின் பெரும் வெற்றியாகக் கருதப்படுகிறது. அத்துடன் கூடவே **ஏழ்மையை இல்லாதொழிக்கும்** வேலைத்திட்டமும் மக்களுக்கு முன்வைக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்குவது ஆரம்பமாகியதும் இக்கால கட்டத்திலாகும். மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்குவது மிகைப்படுத்திப் பிரச்சாரம் செய்யப்பட்டது. "மக்கள் சக்தி"யுடன் ரூபாவஹினியில் காட்சியளித்த ஜனாதிபதி பாடசாலை மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்குவதுடன் வாரி வழங்கும் வள்ளலாக காண்பிக்கப்பட்டார். அமைச்சர்களும் தமது புன்முறுவல் பூத்த முகத்தை தொலைக்காட்சியில் காண்பிப்பதற்காக மதிய போசனம் வழங்கும் விழாக்களைக் கொண்டாடினர். இவை அனைத்தும் இன்று பழங்கதையாகிவிட்டன.

1989ம் ஆண்டு பாடசாலை திறந்திருந்த நாட்கள் மார்ச் 07 தொடக்கம் 17 வரை 09 நாட்கள் மார்ச் 27 தொடக்கம் 31 வரை 05 நாட்கள் ஏப்பிரல் 24 தொடக்கம் 28 வரை 05 நாட்கள் மே 02 தொடக்கம் 31 வரை 21 நாட்கள் ஜூன் 01 தொடக்கம் 09 வரை 07 நாட்கள் மொத்தம் 47 நாட்கள் 1988வருடத்திற்குரிய பதில் நாட்களாக 1989ல் பாடசாலை நடைபெற்ற நாட்கள் 1989 ஜனவரி 05 தொடக்கம் 13வரை 18 நாட்கள் 1989 பெப்ரவரி 01 தொடக்கம் 23வரை 10 நாட்கள் மொத்தம் 28 நாட்கள்

பாது காப்பு அமைச்சின் ஆலோசனைப்படி மூடப்பட்ட 9700 அரசாங்கப் பாடசாலைகளிலும், 400க்கு மேற்பட்ட தோட்ட மற்றும் தனியார் பாடசாலைகளிலும், வடகிழக்கின் பாடசாலைகள் வடகிழக்கு மாகாண அரசின் தீர்மானப்படி திறக்கப்பட்டன. ஆனாலும் சுமார் 40 இலட்சம் மாணவர்களில் 16 வீதம் மாணவர்களே இதன் மூலம் பயன் பெற்றனர். மிகுதி 33 இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் கல்விக்கு நிகழப் போவது என்ன?

இது கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு துறையை கவனிக்காமல் விட்டதாகும். வடகிழக்கு மாகாண அரசு தனது விருப்பின்படி அவ் மாகாணங்களின் பாடசாலைகளைத் திறந்ததினால், மத்திய அரசும் கல்வி அமைச்சும் செய்வதறியாது திகைத்தன. இதனால் ஏனைய மாகாண அரசுகளுக்கும் பாடசாலைகளைத் திறப்பதற்கான "அனுமதி"யை வழங்கி மத்திய அரசும் கல்வி அமைச்சும் தமது பொறுப்பிலிருந்து நழுவிக்கொண்டன.

ஆனாலும், பாடசாலைகளை நிருவாகம் செய்வது எவ்வாறாயினும், அதிகாரப் பரவலாக்கத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பற்றியே எதுவித தெளிவும் அற்ற மாகாண அரசுகளால், அத்தகைய பாரதூரமான கடமையொன்றை எவ்வாறு செய்ய முடியும்? சில மாகாணங்களில் முதலாவதாக ஆரம்ப பாடசாலைகளைத் திறப்பதாகவும் அதன் பின்னர் மேல் வகுப்பு வரையான வகுப்புக்களை படிமுறையில் திறப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. வட மத்திய மாகாணமும் தெற்கில் காலி மாவட்டமும் பரிசோதனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் மேல் மாகாண முதல்வரோ "நாட்டில் சமாதன நிலை ஏற்படும்வரை பாடசாலைகளைத் திறக்க முடியாது" எனக் கூறினார். ஆனால் அவ்வாறு கூறி இரு நாட்களின் பின்னர் "மேற்கு மாகாணப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்" எனத் திடீரெனக் கூறப்பட்டது. மீண்டும் இரண்டு நாட்களின் பின்னர் "களுத்துறை மாவட்டப் பாடசாலைகள் (மேற்கு மாகாணத்தையே சார்ந்தது) திறக்கப்பட மாட்டது" எனக் கூறினார். பாடசாலை (ஆரம்பப் பிரிவு) திறக்கப்படவிருந்த நாளுக்கு முதன் நாள், மேற்கு மாகாணத்தின் பாடசாலைகள் மீண்டும் அறிவிக்கும் வரை திறக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டது. ஆனால் இவ்வாறு அறிவித்ததோ மாகாண அரசின் கல்வி அமைச்சு அல்ல மத்திய அரசின் கல்வி அமைச்சாகும்.

இவை அனைத்திலிருந்தும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்வது என்னவெனில் "பாடசாலை திறப்பது" வெறும் பெயரளவிலான நடவடிக்கை என்பதையேயாகும். இந் நாட்டின் அப்பாவிக் குழந்தைகளுக்கு இடையூறு எதுவுமின்றி கல்வியை வழங்க உறுதியான நடவடிக்கை எடுப்பதற்கு மாகாண அரசாங்கங்களால் மட்டுமல்ல மத்திய அரசினால் கூட முடியாது என்பதேயாகும். இவ் இழப்புக்களுக்கு அபராதம் செலுத்துவது வேறு யாரும் அல்ல. சுமார் 40 இலட்சம் குழந்தைகளேயாகும். இவ் அழிவுக்காக 40 லட்சம் குழந்தைகளும் தமது எதிர் காலத்தையே இன்று இழக்க நேரிட்டுள்ளது.

அரசு தனது வீரப் பிரதாபங்களைக் காட்டுவதற்காகவும், ஓரளவிற்காவது அமைதியை ஏற்படுத்துவதற்கும் அல்லது மக்களது வெறுப்பைத் தணியச் செய்வதற்கும் பாடசாலைகளைத் திறப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையேயாகும். ஆனாலும் கூட அந்நாட்டு குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களைக் கவனத்தில் எடுத்து செயல்பட்டால் மட்டுமே அரசின் இம் முயற்சியானது நேர்மையானதும் உறுதியானதும் என்பதனை விளங்கிக் கொள்ள முடியும்.

பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகள் எழுத வாசிக்க மட்டும் கற்பதில்லை. அதனையும் விட முக்கியமானவை சில உண்டு. **சில மணி நேரம் தொடர்ச்சியாக குறித்த ஒரு இடத்தில் உட்கார்ந்து ஓர் இலக்கை நோக்குவதற்குப் பெறும் பயிற்சியானது, குழந்தைகள் பாடசாலையில் பெறும் முக்கியமான பயிற்சியாகும்.** கஷ்டப் பிரதேசங்களில் உள்ள வசதிகள் குறைவான பாடசாலைகளானாலும் கூட அங்கு பெறும் அக் கட்டுப்பாடும் பயிற்சியும் சாதாரண வீடுகளில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. சிறு குழந்தைகள் ஒன்றைத் தமது மனதில் கிரகித்துக் கொள்ளும் பழக்கத்தையும் பயிற்சியையும் பெறுகின்றனர். தன்னைச் சுற்றியுள்ள ஏனையவர்களுடன் சேர்ந்து கூட்டாகச் செயல்படுவதிலுள்ள பெறுமதியையும் அவசியத்தையும் படிக்கின்றனர். 192 நாட்களுக்குரிய கல்வி வருடத்தில் 47 நாட்கள் மட்டும் பாடசாலைக்குச் செல்வதனால் இவற்றைப் பெறமுடியாது என்பதைக் கூறவேண்டிய அவசியமில்லை. முதற் தடவையாக இவ்வருடம் பாடசாலை செல்லும் "பாக்கியத்தை"ப்பெற்ற சிறார்களுக்கு தமது ஆசிரியரை அறிந்து கொள்ளக் கூட முடியவில்லை. இவர்களுக்கு கிரமமான கல்வியானது இன்னும் கானல் நீராகவே உள்ளது.

ஆனி மாதம் 11ம் திகதி தொடக்கம் உத்தியோக பூர்வமாக பாடசாலை மூடப்படாத போதிலும், போக்குவரத்துத் தடைகாரணமாக பாடசாலைக் கல்வி முறையாக நடைபெறவில்லை.
ஆடி மாதம் 06ம் திகதி தொடக்கம் பாடசாலைகள் உத்தியோக பூர்வமாக மூடப்பட்டன.

மேல் வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கு ஏற்பட்ட தாக்கமோ, இவற்றைவிட அதிகம். கல்வி பற்றி சிறிதளவு நம்பிக்கை இருந்திருந்தால், அது கூட இவ் எல்லையற்ற விடுமுறை மூலம் அழிக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் நிலவும் கொடூரங்களும் வன்முறைகளும் ஒன்று சேர்ந்து பாடசாலைகளை மூடுவதைக் காணும் இவர்கள் சமுதாயத்தின் சகல நிறுவனங்களையும் நிராகரிப்பவர்களாகவும் சமுதாயத்தின் மீது வைராக்கியம் கொண்டவர்களாகவும் மாறியுள்ளனர். எதிர்காலம் குறித்து எவ்வித நம்பிக்கையும் வைக்கமுடியாததே இதற்குக் காரணமாகும்.

இவ் அனைத்து அழிவுகளுக்கும் நீண்ட, குறுகின வரலாறு உண்டு. நீண்ட வரலாற்றைப் பற்றி முதலில் நோக்குவோமாயின்; இதுவரை காலமும் ஆட்சி செலுத்திய அனைத்து அரசாங்கங்களையும் குற்றம் சாட்ட வேண்டும். விசேடமாக 1965ம் ஆண்டு தொடக்கம் பதவியிலிருந்த ஆட்சியாளர் இவ் அழிவுக்குப் பொறுப்பாளிகள் ஆவர்.

70வது பத்தாண்டு காலத்தின் அரை இறுதிப் பகுதியில் இந் நாட்டு இலவசக் கல்வியில் குறிப்பிடத்தக்க அளவு துண்டிப்பு ஏற்பட்டது. இதற்குக் காரணம் கல்விச் சீர்திருத்தம் மட்டுமல்ல. பொருளாதார வீழ்ச்சியால் சமுதாயத்தின் கீழ் மட்டத்தைச் சார்ந்த பெற்றோருக்கு தமது குழந்தைகளை இடையூறு எதுவுமின்றி தொடர்ச்சியாக பாடசாலைக்கு அனுப்ப ஏற்பட்ட கஷ்டங்களும் காரணமாகும்.

இந்நிலைமை 1977க்குப் பின்னர் மிகவும் பாரதூரமாகியது. UN.P., அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தமும் இலவசக் கல்வியை எலும்புக்கூடாக மாற்றியது. சமுதாயத்தில் ஏதாவது ஒன்றைச் செய்யக்கூடிய ஓரளவு பொருளாதார பலமும் உள்ளவர்களுக்கே இவ் எலும்புக் கூட்டிலிருந்தாவது பயன் பெற முடிந்தது. மேலதிகக் கல்வி (டீயூஷன்) விரைவாகப் பரவத் தொடங்கியது இக்கால கட்டத்திலேயாகும்.



ஆதலால் இலவசக் கல்வியை மீண்டும் சிறந்த, பூரணத்துவமான கல்வியாக மாற்ற வேண்டிய அவசியம் பொறுப்பு அரசாங்க எதிர்ப்பாளர்களுக்கு விசேடமாக இடது சாரிகளுக்கு உரியதாயிற்று. ஆனால் இடதுசாரி இயக்கமும் அதனுடன் பின்னிப் பிணைந்துள்ள தொழிற் சங்க இயக்கமும் பலவீனமடைந்துள்ள காலகட்டமே இது. அந்நிலைமைகளின் முறைபாடுகள் மத்தியிலே எதிர்காலம் குறித்து எவ்வித தெளிவான நோக்கமும் இல்லாதவர்கள் வளர்ச்சிபெற்றனர். இலவசக் கல்வியை மென்மேலும் பலப்படுத்துவதற்கும் பிரகடனப்படுத்துவதற்கும் போராட வேண்டிய இயக்கத்திற்குப் பதிலாக இருக்கும் கல்வியைக் கூட மூடிவிடும் அராஜக இயக்கம் ஏற்பட்டது இந்நிலைமைகளினாலேயாகும்.

பாடசாலைகள் மூடுவது குறித்து உரையாடும் போது அதற்குக் காரணியான இப் போக்கின் வேர்களைப் பற்றி போதிய அளவு ஆராய்வு செய்யாவிடின் பாடசாலைகள் தொடர்ச்சியாகத் திறப்பதற்கான பிரச்சனைக்கு பரிகாரம் தேடுவது கடினமான செயலாக அமையும்.

80 ஆரம்பமாகும் போது பாடசாலைக் கல்வியின் பிரயோகப் பெறுமதியானது பாரதூரமான அளவில் வீழ்ச்சியடைந்திருந்தது. அறிவு வளர்ச்சிக்கு மட்டுமின்றி, பரீட்சையை இலக்காகக் கொண்ட கல்வியின் கடுமையான போட்டியால் சேர்வு பெறும் மாணவர்கள் வேலை இன்மைக்கு முன்னால் அடியெடுத்து வைக்கும்போது விரக்தியே அதிகரிக்கும்என்பது இரகசியமான தொன்றல்ல. ஊழல் உறவினர் அரச ஆதரவாளர் இலஞ்சம் ஆகியவற்றிற்காக தொழில் வழங்கலைக் காணும் போது இவ் விரக்தியானது மென்மேலும் அதிகரிக்கிறது.

அன்மைக்காலத்தில் வளர்ச்சி பெற்ற புத்தி விரோதம் இவற்றினாலேயே போஷணை பெற்றது. இந்தப் புத்தி விரோத கருத்தமைவுக்கு கடந்த ஒரிரு வருடங்களாக பிரதான செய்திப் பத்திரிகைகளாலும் தலையசைக்கப்பட்டது. தேசிய சிந்தனையைப் பிரதிநிதித்துவப் படுத்தியவர்கள் "தமது" என்னும் கன்ஞேட்டத்தில் அனைத்தையும் நிராகரித்தனர். பிரித்தானிய மந்திரியின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட எமது பாடசாலை முறையும் அதன் பாட விதானத்திற்கு ஏற்ப கற்பிக்கப்படும் கணிதம், விஞ்ஞானம் மேற்கத்திய பாணியிலானது எனவும் இந் நாட்டு பாடசாலைகளில் வழங்கப்படும் மேற்கத்திய பாணியிலான கல்வி எவ்வித பெறுமதியும் பயனும் அற்றது எனவும் கூறினர். அதுவரை காலமும் விரத்தியுடன் இருந்தோரைக் கண்ணுற்று, தமது எதிர்காலமும் இவ்வாறானதென எண்ணிய மேல் வகுப்பு மாணவர்களுக்கு இத் தேசிய சிந்தனை மூலம் பாடசாலையை நிராகரிக்கும் வேண்டுகோள் மட்டுமே கிடைத்தது. பூரணத்துவமான இலவசக் கல்விக்காக போராட வேண்டிய பலம் வாய்ந்த இயக்கம் ஒன்றுக்குப் பதிலாக, பாடசாலைகளை மூடுகின்ற பிற்போக்குத் தன்மையானதும் வன்முறைகளுடன் கூடியதுமான அரசியல் ஒன்று வகுப்பறைக்குள் பிரவேசித்தது.

பாடசாலைகளை மூடியதால் நிகழ்ந்தது என்ன? நகர்புறங்களிலுள்ள வசதிகளுடன் கூடிய பாடசாலைகளில் அனுமதி பெறும் "பாக்கியம்"அற்ற மாணவ மாணவிகளுக்கு அதற்குச் சமமான வசதிகளும் கல்வி உரிமைகளும் கிடைத்துள்ளனவா? நாம் பெறவேண்டி இருந்ததோ இவற்றையே யாகும். ஆனால் பாடசாலைகளை வெற்றிகரமாக மூடியதால் பெற்றுக் கொண்டதோ.........?

நீண்ட காலம் பாடசாலைக்குச் செல்லாததால் நட்டம் ஏற்பட்டது ஏழைப்பொதுமக்களுக்கே என்பதை இப் பிற்போக்கு வன்முறை அரசியலில் ஈடுபடுவோர் சில வேளை விளங்காமல் இருக்கக்கூடும்.

சமூகத்தில் பரவலாக வியாபித்த கோர வன்முறைகளால் எல்லா இடங்களிலும் பரவியிருந்த மேலதிகக் கல்வி நிலையங்கள் (டியூஷன் சென்டர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறையாக நடாத்துவதற்குத் தடங்கல் ஏற்பட்டது. இவை வாரக்கணக்கில் மூடப்பட்டன. இதனிடையே பெருந்தெருக்களிலும் சந்திகளிலும் இளைஞர்கள் எரிக்கப்படுவது தொடர்ச்சியாக நிகழ்வதால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை மாலைநேர வகுப்புகளுக்கு அனுப்ப விரும்புவதில்லை. இதனால் மிகவும் பிரபல்யமடைந்திருந்த இவ் "டியூஷன்" கூட சிதைவுற்றது. இதன் மூலம் தடை ஏற்பட்டதும் மத்தியதர வர்க்கத்தினருக்கே யாகும். தமது வருமானத்தில் வாயை வயிற்றைக்கட்டி தமது பிள்ளைகளைப் படிப்பிக்கவே இவ் மத்தியதர வர்க்கத்தினர் முயற்சிக்கின்றனர். இம் மேலதிகக் கல்விக்காகச் செலவழிப்பது இவர்களுக்கு இலகுவான தொன்றல்ல. இன்று இச் சமூகப் பிரிவினர் கூட நிலை தடுமாறியுள்ளனர்.

ஆனால் இத்துயரமான நிலையில்கூட வியாபித்துள்ள மேலதிகக் கல்விச் சந்தையொன்று உண்டு. அது சமுதாயத்தில் மிக உயர்ந்த வருமானத்தைப் பெறுகின்ற பிரிவினர் தமது வீடுகளுக்கு வழங்கும் கல்வியாகும். மத்திய வங்கி அறிக்கையின்படி இச் சமூகத்தட்டின் பொருளாதார பலமானது கடந்த சில வருடங்களில் அதிகரித்துள்ளது. நாட்டின் சனத்தொகையை பத்து தட்டுகளாக வகுக்கும் மத்திய வங்கியின் அறிக்கையில் இவ் உயர் தட்டின் வருமானம் திறந்த பொருளாதர அமைப்பின் கீழ் **பாய்ச்சலில் அதிகரித்ததோடு,** கீழ்த் தட்டினரின் வருமானம் **வீழ்ச்சி** அடைந்துள்ளது. பழைய காலத்தில் பண்டாரநாயக்க போன்றோர் தமது மாளிகைகளுக்கு ஆசிரியர்களை அழைப்பித்து தம் குழந்தைகளுக்கு கற்பித்தவாறு, அம் மேல் தட்டினரும் தமது குழந்தைகளுக்கு கல்வி வசதிகளைப் பெற்றுக் கொடுக்கின்றனர்.

அவர்களுக்கு இந் நாட்டுப் பரீட்சைகள் இல்லாவிட்டாலும் இலண்டன் பரீட்சைகள் உண்டு. க.பொ.த (சாதாரண தரம்) தொடக்கம் பட்டயக் கணக்காளர் போன்ற தொழில் துறைக் கல்வி வரையிலான கதவுகள் அவர்களுக்காகத் திறக்கப்பட்டுள்ளன. வசதி பெற்றவர்களுக்கென்றே இன்னமும் வரையறுக்கப்பட்டுள்ள சட்டக்கல்லூரி நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. இவற்றை யெல்லாம் நோக்கும்போது இன்றைய கல்வித்தடைகள் மூலமாக செல்வந்தர்களுக்கு அவ்வளவு நட்டமோ குறைகளோ ஏற்படவில்லை. இதனால் பாடசாலைகளைத் திறந்து நடாத்துவதற்கு எடுக்கும் முயற்சி உளப் பூர்வமானதா என்பது சந்தேகமாகவே உள்ளது.

ஆதலால் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லக்கூடிய சந்தர்ப்பத்தை சூழ்நிலையை ஏற்படுத்துவது பொதுமக்களது இன்றைய கடமையும் பொறுப்பும் ஆகும். அரசின் அடக்கு முறை ஒரு புறமும்; இவற்றிடையே சிக்கித் தவிக்கும் குழந்தைகள் தமது எதிர்காலத்தையே அபராதமாக தாரைவார்த்துள்ளனர். இது இத்துடன் நிறுத்தப்படல் வேண்டும். இந் நாட்டுக் குழந்தைகள் கல்வியைப் பெறுவதற்கான உரிமையை நாம் மீண்டும் வென்றெடுக்க வேண்டும். இவ் உரிமையை இல்லாதொழிக்கச் செயல்படும் அனைவருக்கும் எதிராக மக்கள் இயக்கம் ஒன்றின் அத்தியாவசியத்தை எவராலும் நிராகரிக்க முடியாது. எதிர் காலத்தில் பாடசாலைகளை மூடுவதற்கு முயற்சிக்கும் எந்தவொரு அரசியலுக்கும் எதிராக திரண்டெழுவதற்கு இம் மக்கள் இயக்கம் தீர்மானிக்க வேண்டும். ஆனால் அவ்வாறான இயக்கமொன்றுக்கான அழைப்பு இராணுவத்தினாலோ அல்லது அரசாங்கத்தாலோ விடுக்கப்படும் போது மக்கள் அதனை நிராகரிப்பார். பிறிதொரு அரசியலுக்குக்கூட இதனைப் பலாத்காரமாகச் செய்யமுடியாது. தமது குழந்தைகளுக்காக தீர்க்கமாக அர்ப்பணிப்பது இன்றைய ஜனநாயக முற்போக்கு பெற்றோர்களின் கடமையாகும். அவ்வாறு இல்லாவிடின் திறக்கப்படும் பாடசாலைகள் மீண்டும் மூடப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதனைத் திறப்பதற்கான வாய்ப்புக்களை விட அதிகமாகவும், பிள்ளைகளின் எதிர்காலம் அழிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகமாகும்.



# தேசிய இனப்பிரச்சனையும் முஸ்லீம் மக்களும்

வ.ஐ.ச.ஜெயபாலன்

இலங்கைத் தீவின் 24 மாவட்டங்களிலும் வீதாசார அடிப்படையில் முஸ்லிம் மக்கள் முதன்மைபெறும் நான்கு மாவட்டங்களும், தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே அமைந்துள்ளன.

இலங்கைத்தீவில் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஒரே மாவட்டமான அம்பாறை மாவட்டம் இவற்றுள் ஒன்றாகத், தமிழ் பேசும் மாநிலத்தில் அமைந்துள்ளது. இலங்கைத்தீவில் அதிக வீதாசாரத்தில் முஸ்லிம் மக்கள் வசிக்கும் ஒரே மாகாணமும் கிழக்கு மாகாணமேயாகும். இங்கு முஸ்லிம் மக்கள் மொத்தச் சனத்தெகையில் 32. 4 சத வீதத்தினராக உள்ளனர். கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களும் (அம்பாறை, திருகோணமலை, மட்டக்கிளப்பு) வீதாசார அடிப்படையில் முஸ்லிம் மக்கள் முதன்மை பெறும் நான்கு மாவட்டங்களுள் அடங்குகின்றன. வீதாசார அடிப்படையில் மூன்றுவதாக முதன்மை பெறும் மன்னார் மாவட்டமும், தமிழ் மாநிலத்தைச் சேர்ந்த வடமாகாணத்துள்ளேயே அடங்குகின்றது

மன்னார் மாவட்டத்தின் தொடர்ச்சியாக மேற்கு கடற்கரை சார்ந்து பொம்பரிப்பு, வண்ணாத்திவில்லு, புத்தளம் நகரம், கற்பிட்டிக்குடாநாடு, உடப்புக் கிராமசபை என்பனவற்றை உள்ளடக்கும் புத்தளம் தேர்தல் தொகுதி, அம்பாறை மாவட்டம் போலவே முஸ்லிம் மக்கள் முதன்மைபெறும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம்மாகும்.

1958ஆம் ஆண்டிலும், 1976ஆம் ஆண்டிலும் தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழுவின் மதிப்பீடுகளின்படி, புத்தளம் தேர்தல் தொகுதியின் குடிசனப்பண்புகள் பின்வருமாறு அமைகின்றது.

| ஆண்டு | சிங்களவர் | முஸ்லீம்கள் | இலங்கைத் தமிழர்கள் | இந்தியத் தமிழர்கள் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|
| 1958 | 34.7 | 41.0 | 18.9 | – | 5.4 |
| 1976 | 37.9 | 38.5 | 19.9 | 2.9 | .73 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புத்தளம் தேர்தல் தொகுதி ஏறக்குறையப் புத்தளம் மாவட்டத்தின் மூன்றிலொரு பகுதியைக் கொண்டுள்ளது. அனைத்துப் புத்தளம் மாவட்டத்தினதும் குடித்தொகைப் பண்பு 1981ஆம் ஆண்டு பின்வருமாறு அமைந்துள்ளது.

| சிங்களவர் | முஸ்லிம் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | ஏனையோர் |
|---|---|---|---|---|
| 82.6 | 9.7 | 6.7 | 0.6 | 0.4 |

புத்தளம் தேர்தல் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு புத்தளம் -கற்பிட்டி மாவட்டம் உருவாக்கப்படுதல் வேண்டும். இப் பிரதேசம் வடக்க கிழக்கு மாகாணங்களுடன், பொதுவான சமூக அரசியல் பொருளாதார நலன்களைக் கொண்ட பகுதியாகும்.

தமிழ் பேசும் மாநிலத்தில் முஸ்லீம் மக்கள் முதன்மை பெற்ற போதிலும் விவசாயிகளாகவும், கிராமவாசிகளா கவும் வாழும் அவர்களது மத்தியில் - நகர்மயமான மேற்கு மாகாண முஸ்லீம் மக்களிடம் காணப்படுவது போன்ற உயர் வர்க்கங்களதும், பரவலான வளர்ச்சி காணப்படவில்லை

யாழ்ப்பாணம் இதற்குப்புறநடையாக இருப்பினும் இங்கு. (தொகை ரீதியாக 20ம் இடத்தையும் வகிக்கும் யாழ்ப்பாணத்தில்) தலைமைத்துவம் வளரக்கூடியளவு முஸ்லிம் மக்களது செறிவு அமையவில்லை.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே கல்வியில் முதன்மைபெறத் தொடங்கிய யாழ்ப்பாணத்து முஸ்லிம் கல்விமான்கள், கொழும்பு வர்த்தகத்தலைமைக்குச் சேவை செய்பவகளாகவே காலம் கழிக்க நேர்ந்தது.

சிங்கள மாநிலத்தில் கொழும்பு சார்ந்து மேற்கு மாகாணத்திலும், கண்டி மாவட்டத்திலுமே முஸ்லிம்கள் தொகை ரீதியாக முதன்மை பெறுகின்றனர்.இதனால் முஸ்லிம் மக்களது மத்தியில் காணப்படும் உயர்
வர்க்கம்,மத்தியதரை வர்க்கம் என்பவை பாரம்பரியமாக இப்பிரதேசங்களிலேயே முதன்மை பெற்றிருந்தன.அண்மைக்காலம் வரை இந்த இந்த முதன்மை பாதிக்கப்படவில்லை.இதனால் பொதுவாக அனைத்து முஸ்லிம் மக்களது தலைமை கொழும்பு.கண்டி சார்ந்த உயர்வர்க்கங்களின் நலன்களை முதன்மைப்படுத்தும் சிலரின் கைகளிலேயே இது காலும் இருந்து வந்தது.



## முஸ்லீம் மக்களின் குடித்தொகைப் பரம்பல் 1981 ம் ஆண்டுப் புள்ளி விபரம்

| மாவட்டங்கள் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் வீதாசார வரிசையில்: | மாவட்டச் சனத்தொகையில் தமிழ் முஸ்லிம் மக்களின் வீதாசாரம் | மாவட்டத்தின் முதன்மையான மொழி |
|---|---|---|
| 1 அம்பாறை | 41.6 | தமிழ் |
| 2 திருகோணமலை | 29.0 | தமிழ் |
| 3 மன்னார் | 26.6 | தமிழ் |
| 4 மட்டக்களப்பு | 24.0 | தமிழ் |
| 5 கண்டி | 9.9 | சிங்களம் |
| 6 புத்தளம் | 9.7 | சிங்களம் |
| 7 கொழும்பு | 8.3 | சிங்களம் |
| 8 களுத்துறை | 7.5 | சிங்களம் |
| 9 மாத்தளை | 7.2 | சிங்களம் |
| 10 அனுராதபுரம் | 7.1 | சிங்களம் |
| 11 வவுனியா | 6.9 | தமிழ் |
| 12 பொலநறுவை | 6.5 | சிங்களம் |
| 13 குருநாகல் | 5.1 | சிங்களம் |
| 14 கேகாலை | 5.1 | சிங்களம் |
| 15 முல்லைதஙதீவு | 4.9 | தமிழ் |
| 16 பதுளை | 4.2 | சிங்களம் |
| 17 காலி | 3.2 | சிங்களம் |
| 18 கம்பஹா | 2.8 | சிங்களம் |
| 19 நுவரெலியா | 2.8 | தமிழ் (மலையகம்) |
| 20 மாத்தறை | 2.6 | சிங்களம் |
| 21 யாழ்ப்பாணம் | 2.4 | தமிழ் |
| 22 மொனராகலை | 1.9 | சிங்களம் |
| 23 இரத்தினபுரி | 1.7 | சிங்களம் |
| 24 அம்பாந்தோட்டை | 1.1 | சிங்களம் |

இன்று நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இந்த நாட்களில் கொழும்புக்கு வெளியே ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லீம்.மக்கள் மத்தியில் கல்வியும்,புதிய தலைமை பற்றிய சிந்தனை வலுவடைந்து வருவதும்,சிங்கள பௌத்த பேரினவாதிகளின் முஸ்லீம் விரோத நடவடிக்கைகள் அதிகரித்து வருவதும்,ஒன்றுக்கொனறு சம்பந்தமில்லாத விடயங்கள் அல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்களமாநிலத்தில் நகரங்கள் கிராமங்கள் என்று முஸ்லிம் மக்கள் சிதறிய நாடாளுமன்ற தொகுதிகளில் முஸ்லிம் மக்கள் கணிசமான அளவு வாழ்கின்றனர்.

இது காலவரை,சிறுசிறு நாடாளுமன்றத் தேர்தல் தொகுதி அடிப்படையில் தேர்தல்கள் இடம்பெற்று வந்தமையால் சிங்கள மாநிலத்தில் மேல் மாகாணம்,மத்திய மாகாணம் சார்ந்த பல தேர்தல் தொகுதிகளில் இறுதி வெற்றியை தீர்மானிக்கும் சமூகப்பிரிவாக,முஸ்லிம் மக்கள் அமைந்தனர்.

இந்நிலமை,முதலாளித்துவ அரசியலைக் கையாளத்தக்க பணபலமுள்ள உயர்வர்க்க முஸ்லிம் சீமான்களுக்கு ஐக்கிய தேசியக்கட்சி(U.N.P) சிறீ லங்கா சுதந்திரக்கட்சி(S.L.F.P) போன்ற சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளுடன் அரசியல் பேரம் பேசுவதற்கு வாய்ப்பாய் இருந்தது.

சில சந்தர்ப்பங்களில்,முஸ்லிம் சீமான்களும் தலைவர்களும் சிங்கள மாநிலத்தில் அறுபதிற்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் பலம் தங்களது கையில் இருப்பதாக நியாயபூர்வமாகவே ஜம்பம் அடித்து வந்துள்ளனர்.

எனினும் வரலாற்றிலிருந்து தமிழர்கள் கற்றுக் கொண்ட பாடத்தை முஸ்லிம் மக்களும் கற்றுக் கொள்வதை அவசியமாக்கும் நடவடிக்கைகளைச் சிங்கள பௌத்த பேரினவாத அரசு தேர்தல் தொகுதிகள் சம்பந்தமாகவும் மேற்கொண்டது.

ஒருபுறம் பணபலம் வாய்ந்த முஸ்லிம் உயர் வர்க்கங்களின் நலன்களில் சிங்கள பௌத்த உயர் வர்க்கமும் அவற்றின் தலைமைகளும்,நேரடியாகவே கை வைக்க ஆரம்பித்துவிட்டன.மறுபுறம் அவை சிறு தொகுதி அடிப்படையிலான நாடாளுமன்றத் தேர்தல் முறையைக் கைவிட்டுவிட்டு,மலையகத்தமிழர் முதன்மைபெறும் நுவரெலிய_ மஸ்கெலியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய சிங்கள மாநிலம் முழுவதும்,எவர் தயவுமின்றித் தமது ஆதிக்கத்தை ஸ்தாபிக்கத்தக்க வகையில்,பெரும் மாவட்ட அடிப்படையிலான வீதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையை 1978 ம் ஆண்டின் அரசியல் யாப்பின் மூலம் புகுத்தியுள்ளன.

புதிய நிலமைகளில் முஸ்லிம் உயர் வர்க்கங்கள் அரசியலிலும் சரி,சமூக பொருளாதார ரீதியிலும் சரி தமக்கிருந்த பேரம்பேசும் சக்தியின் இரண்டு முக்கிய அடிப்படைகளையும் பறிகொடுத்து விட்டன எனலாம்.

இலங்கையில் தமிழர்களது வரலாற்றை அறிந்த எவரும்,முஸ்லிம்களின் வரலாறும் அதே தடத்தனில் தள்ளிவிடப்பட்டுள்ளதைப் புரிந்து கொள்ள முடியும்.முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களும்,அரச பயங்கரவாத சம்பவங்களும், 1970 களிலிருந்து சிதறிய அடிப்படையில் அதிகரித்து வருவது,அவர்களது வரலாறும் ஏனைய தமிழ் பேசும் மக்களது வரலாற்றுத் தடத்திலேயே நகர்ந்து வருகின்றது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

இந்த நிலமைகளில்,வேறெரு வரலாற்று அம்சத்திலும் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றின் பண்பை முஸ்லிம் மக்களும் பெறுவதை காணக்கூடியதாக உள்ளது. கொழும்பு சார் உயர் வர்க்கங்களின் தலைமைகளை உதறித்தள்ளித் தமது அடிப்படைப் பிரதேசங்களின் நலன்களுடன் தமது



தலைமையை புதிதாக ஸ்தாபித்துக் கொள்ளும் போக்கையே நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கொழும்புக்கு வெளியில் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் வர்க்க அமைப்பு ரீதியான மாற்றங்களையும்,விழிப்புணர்வையும் ஏனைய தமிழ் மக்கள் புறக்கணித்து விடமுடியாது.இதுகாலும் கொழும்பு சார் முஸ்லிம் சீமான்கள்,தமது கைகளுள் இரத்தினக்கல் வர்த்தகத்தை வைத்திருப்பதற்காக ஏனைய பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களது நலன்களையும்,அவர்களது பாரம்பரிய மண்ணின் பாதுகாப்பையும் சிங்களப் பேரின வாதிகளின் அபிலாசை களுக்குத் தத்தம் செய்து வந்தனர்.

இன்று புதிய நிலமைகளில் இரத்தினக்கல் உட்படப் பலதுறை வர்த்தக முதன்மைகளையும் கொழும்புசார் மேல்வர்க்கங்கள் இழந்து வருகின்றன.

அவர்களது மரபுசார்ந்த அடிப்படை வர்த்தக முயற்சிகளில் முதன்மையான இரத்தினக்கல் வர்த்தகம் தொடர்பாக,மரபுசார் இரத்திக்கற் சுரங்கப் பகுதிகள் கைவிடப்பட்டு வருவதும்,புதிய சுரங்கங்கள் திறக்கப்படு மாத்தளை, மொனராகலை,அம்பாந்தோட்டை போன்ற பகுதிகளில் இரத்தினக்கல் வர்த்தகம் இனவாத அரசுகளின் ஆதரவுடன் சிங்களவர்களது கைகளுக்கு மாறிவருவதும்; மொத்த வியாபாரத்தில் அரசுகளின் ஆதரவுடன் சிங்களவர்களது கைகளுக்கு மாறிவருவதும்; மொத்த வியாபாரத்தில் அரசு ஈடுபட்டு முஸ்லிம் மக்களின் முதன்மையை உடைத்துள்ளமையும்,இங்கு கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.இதுவோர் உதாரணம் மட்டுமே.தமிழ், முஸ்லிம் வர்த்தக முதலாளித்துவங்களுக்கும்,உயர் வர்த்தகர்களுக்கும் சிங்கள பௌத்த பேரினவாத அரசினதும் தீர்ப்பு ஒரேமாதிரியானதாகவே அமைந்துள்ளது.

**இன்று,**

**முஸ்லிம் மேலோர்களது கையுள்**
**பாரம்பரியமாக நிலவிய இரத்தினக்**
**கற்களும்**
**பறிபோய்விட்டன.**
**சாதாரண முஸ்லிம் மக்களின்**
**கால்களின் கீழ்**
**பாரம்பரியமாக நிலவிய மண்ணும்**
**பறிபோய்விட்டது.**

கொழும்புசார் முஸ்லிம் உயர்வர்க்கங்கள்,தமது அரசியல் வியாபாரத்தில் இதுகாலும் நிலவிவந்த பேரம் பேசும் சக்தியை வேகமாக இழந்து வருகின்றன.

"சபாநாயகர்" பதவி போன்ற உயர் அரசியல் பதவிகளில் இருந்து கேட்டுக்கேள்வியின்றியே தூக்கி வீசப்படும் போக்கு ஒருபுறமாகவும்; பல்வேறு பிரதேசங்களையும் சார்ந்த தமது எடுபிடிகளுக்குப் பகிர்ந்தளிக்கக் கூடிய எலும்புத் துண்டுகளை,அரசிடமிருந்து பெறும் மார்க்கங்கள் அடைக்கப்பட்டு வருவது மறுபுறமாகவும்,கொழும்பு சார் முஸ்லிம் சீமான்களின் தலைமையை,பலத்த நெருக்கடிகளுககுள்ளாக்கி வருகின்றது.இப் புதிய போக்கை "அராபிய எண்ணெய்" பூஞ்சாண்டிகள் மூலமோ அல்லது,மேலும் மேலும் சரணுகதி அடைவதன்மூலமோ தடுத்து நிறுத்த முடியும் என்ற முட்டாள் தனமான நம்பிக்கையில் கொழும்பு முஸ்லிம் சீமான்கள் தம்மை அழித்துக் கொள்வார்கள் போலத் தெரிகிறது.

**நன்றி:தமிழமுது**

**(தொடரும்)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோர்வே நாட்டில் "சுவடுகள்"

நோர்வே நாட்டிலிருந்து வெளிவரும் "சுவடுகள்" சஞ்சிகையை வாசகர் ஒருவர் அனுப்பி வைத்திருந்தார்.சஞ்சிகையைப் பார்த்ததில் மிகுந்த மகிழ்ச்சி. இவ்வாறன சஞ்சிகை வெளியிடுவதில் உள்ள சிக்கல்கள் நாம் அறிவோம்.சிக்கல்களுக்கூடாக வெளியிடும் இவர்கள் துணிவிற்கு பாராட்டுக்கள்.மனிதநேயம் மரணித்துவிடாது என்பதற்கு இவை எடுத்துக்காட்டு.சஞ்சிகையின் உள்ளடக்கம்,அமைப்பு வரவேற்கத்தக்கது. "சுவடுகள்" தந்த கவிதையொன்றை உங்களின் சிந்தைக்கு தருகிறோம்.

## போர் முனையில் முன்னேறுவேன்

இன்னும் காத்திருக்கிறேன் கட்டளைக்காக...
சிங்கள இராணுவமா? அந்நிய இராணுவமா?
கணமென இயங்கும் என் துப்பாக்கிகள்
தலைமை துரோகி எனக் கூறின்
தெருமுனைக் கனகு முதல்
மருதடி சிவன் வரை
அழித்து வரக் காத்திருக்கிறேன்.
எப்போதும் தயாராக
என் விரல்கள் அணைக்கும் துப்பாக்கிகளுடன்...

என் பால்ய நண்பனை நான் சுட்டதற்காக
அம்மாவும் கோவப்பட்டாளாம்
அதற்கு நான் என்ன செய்ய?
நான் நம்புவதெல்லாம்
அப்பழுக்கில்லாத அந்த தலைமையைத் தான்!

சிந்தித்து செய் என்றனர் வெட்டியர்கள்
எனக்கு தலைமை சொல்லித் தந்ததெல்லாம்
துப்பாக்கிக் குழலில் இருந்து
அரசியல் பிறக்கிறது என்பது தான்.
இது அலசுவதற்கான நேரம் அல்ல
இபபோது அவசியமெல்லாம்
சுட்டுப் போட்டு முன்னேறுவதுதான்!
நான் இன்னமும்
கட்டளைக்காகக் காத்திருக்கிறேன்.

_சின்னு_





# குழந்தைப் பண்ணைகள்

நன்றி:புறேப்

தமிழாக்கம்:மு.சிவா

இலங்கையில் தேயிலை,இறப்பர்,தேங்காய் என்பன மாத்திரம் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று எவரும் எண்ண வேண்டாம்.தர்மிஷ்ட அரசின் தாராள பொருளாதாரக் கொள்கையின் மூலம் குழந்தைகளும் ஸ்கன்டிநேவிய,ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறார்கள்.இதற்கு இலங்கைச் சட்டங்களும் தாராளமாக வளைந்து கொடுக்கின்றன.ஏனென்றால் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் சாதாரண ஏற்றுமதி வர்த்தகர்களல்ல,மேல் தட்டு குடும்பத்து பெண்மணிகள்(சமூக சேவகிகள்) ,உல்லாச பயண விடுதி நடத்துபவர்கள் ஆகியோர்தான் இந்தப் பெரியவர்கள். ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் அநுக்கிரகங்களும் இவர்களுக்குத் தாராளமாக உண்டு.

தற்போது மேற்கு நாடுகளில் குழந்தைகளைத் தத்தெடுப்பது(அதுவும் ஆசிய நாட்டுக் குழந்தைகளை) நாகரீகமாகிவிட்ட செயற்பாடாகும். இலங்கை போன்ற வறுமையிலும் கடனிலும் மூழ்கிக்கொண்டிருக்கும் நாட்டு மக்களுக்கு மேற்கு நாட்டு பணத்தைக் காட்டி குழந்தைகளை வாங்குவது ஒன்றும் பெரிய கஷ்டமான விடயமில்லை.மேற்கு நாடுகளுக்கு இவ்வாறு அனுப்பப்பட்ட குழந்தைகளுக்கு என்ன நடந்தது என்ற விபரங்களை எந்த சமூக சேவை நிறுவனமும் ஆராய்ந்ததாக தகவல்களும் கிடைக்கவில்லை.

கொழும்பில் உள்ள பெரிய மனிதர்கள் வாழும் பணவசதி படைத்த இடங்களில்தான் இந்த குழந்தைப் பண்ணைகள் நடாத்தப்படுகின்றன.இது தவிர உல்லாசப் பயண விடுதிகளின் பின் புறத்திலும் இவை உண்டு. கர்ப்பணிகளைத் அவர்களது மகப்பேறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலத்தில் அழைத்து வந்து குழந்தை பெற்றதும், அக் குழந்தை விடுதி உரிமையாளர்களினால் நல்ல விலைக்கு வெளிநாட்டு சோடிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. சட்டப்படி குழந்தைகள் தத்தெடுக்கப்படுகிறார்கள். இந்த வேலையில் சட்டத்தரணிகள், ஆண் பெண் புரோக்கர்கள், பெரிய இடத்துப் பெண்மணிகள் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். 1987 ஆம் ஆண்டு பத்திரிகையொன்றில் வந்த செய்தியினை அடுத்தே இந்த மோசடி வியாபாரம் அம்பலத்துக்கு வந்தது. மேற்கு ஜேர்மன் பத்திரிகையொன்றில் வந்த செய்தியின் அடிப்படையின்படியே இலங்கை பத்திரிகை இச் செய்தி வெளியிட்டது. இதனையடுத்து குழந்தைகள் பராமரிப்பு திணைக்களம் நடவடிக்கையில் இறங்க வேண்டியதாகிவிட்டது. இதனையடுத்து வாதுவை (கொழும்பில் இருந்து 21 மைல் தெற்கே) என்ற இடத்தில் வெற்றிகரமாக தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குழந்தைப் பண்ணையொன்றை பொலிசார் சுற்றி வளைத்ததில் இருபது தாய்மாரும், இருபத்திரெண்டு குழந்தைகளும் பொலிசாரால் மீட்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் தொலைவில் இருந்த களுத்துறை பொலிசார்தான் அழைக்கப்பட்டனர். வாதுவை பொலிசார் அழைக்கப்படவில்லை. இந்தக் குழந்தைப் பண்ணை பற்றி வாதுவை பொலிசார் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. செல்வாக்குள்ள மனிதர்களின் தலையீடு இருக்கக்கூடும் என்பதற்காக தொலைவில் இருந்தே பொலிசார் அழைக்கப்பட்டனர். இந்த குழந்தைப் பண்ணை ஒரு உல்லாச பயணிகள் விடுதியின் பின்புறத்தில் நடத்தப்பட்டது. ஜேர்மன் ஆணைத் திருமணம் செய்த இலங்கைப் பெண்ணே இந்த விடுதியின் உரிமையாளர் ஆவார். உல்லாசப் பயணிகள் விடுதியை நடத்துவதாக பெயர் பண்ணிக்கொண்டு வெற்றிகரமாக இந்த பண்ணையை நடத்தி வந்துள்ளனர். நிறைமாதக் கர்ப்பிணிகள் இந்த விடுதிக்கு ஆசைகாட்டி அழைத்து வரப்பட்டு குழந்தை பெற்றதும் காசு கொடுத்து வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள். இந்த விடுதியில் மீட்கப்பட்ட குழந்தைகளில் பதினொருபேர் ஒல்லாந்து, ஜேர்மன், சுவீடன் நாட்டுப் பிரசைகளினால் தத்தெடுக்கப்பட்டு இருந்தனர். 1987 ஆம் ஆண்டில் மட்டும் இலங்கையில் உள்ள குழந்தைகளை ஏற்றுமதி செய்வதற்கான 3000 விண்ணப்பங்களை பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான அதிகப்படியான கோரிக்கைகளினால் குழந்தைத் திருட்டுக்கள் சர்வசாதாரணமாகிப் போய்விட்டன. அதுமாத்திரமன்றி அரசாங்க வைத்தியசாலைகளில் பிறக்கும் குழந்தைகள் சிலவற்றை இறந்து பிறந்ததாக கூறி விற்பனை செய்திருக்கிறார்கள். சிறுவர் பராமரிப்பு திணைக்களம், சிறுவர் நல்லொழுக்கத் திணைக்களம் என்பன 1987 மார்ச் வரை சமூக சேவை அமைச்சின்கீழ் இயங்கி வந்தன. சமூக சேவை அமைச்சின் நடவடிக்கைகளை அடுத்து இந்த இரு திணைக்களங்களும் திடீரென்று மகளீர் விவகார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதுவரை அதற்கான காரணம் என்ன என்பது தெரிவிக்கப்படவில்லை. மந்திரி சபையினால் தீர்மானிக்கப்பட்ட குழந்தைப் பண்ணைத் தடுப்புச் சட்டம் இன்னமும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை. இந்தச் சட்டப்படி குழந்தைகள் தத்தெடுக்கப்படும்போது காசோ, பொருளோ கைமாறக் கூடாது. இந்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டாலேயே சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் தத்தெடுக்கும் விவகாரங்களில் தலையிடும் அதிகாரத்தை பெற முடியும். வர்த்தகமானியில் சட்டமூல சரத்துகள் பிரசுரிக்கப்படுவதே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. ஏன்? யாரால்?.

பொலிசார் முதல் குழந்தைப் பண்ணையைப் பற்றி நடவடிக்கை எடுத்தபோது, அதை நடாத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க சட்டத்தில் எதுவித வசதியும் இருக்கவில்லை. இவற்றிற்கு அடிமைகள் தடுப்புச் சட்டத்தின்படிதான் நடவடிக்கை எடுக்க முடியும். இதன்படி பணத்திற்காக குழந்தைகள் விற்கப்படுவதை நிரூபிக்க வேண்டும். இது மிகவும் கடினமான காரியம். இப்படியான ஓட்டைகள் சட்டத்தில் உள்ளதால் குழந்தைப் பண்ணை நடத்தியவர்கள் மீது பொலிசாரால் வழக்குத் தொடர முடியாது போய்விட்டது.

1944 ஆம் ஆண்டு சட்டப்படி உள்ளூர்வாசிகளே குழந்தைகளைத் தத்தெடுக்க முடியும். இச் சட்டம் 1964 ஆம் ஆண்டு வெளிநாட்டவரும் விசேட காரணங்கள் காரணமாக தத்தெடுக்கலாம் என்று திருத்தப்பட்டது. பின்னர் 1977இல் வெளிநாட்டார் எதுவித பணக் கொடுக்கல் வாங்கல்கள் இன்றி தத்தெடுக்கலாம் என்று சட்டம் திருத்தப்பட்டது. ஒரு குழந்தைக்கான கொடுக்கல் வாங்கலில் கைமாறும் தொகை 117,000 ரூபாவுக்கு மேற்பட்டதாகும். தத்தெடுக்கும் விவகாரங்களை செய்யும் அதிகாரிகளும் இந்த வியாபாரத்தில் ஏஜன்டுகளோடு கூட்டாக வேலை செய்கிறார்கள் என்றும் தெரியவருகிறது. குழந்தைகள் தத்தெடுக்கப்படும்போது அவை தமது சொந்தத் தாயாரின் மூலமே தத்தெடுப்பவர்களிடம் கையளிக்கப்படவேண்டும் எனச் சட்டம் கூறுகிறது. இதனால் தானோ என்னவோ ஒரு பெண் ஒரு வருடத்தில் மூனறு குழந்தைகளுக்கு தாயாகி தத்துக்கொடுத்த விவகாரம் ஒன்றை சம்பந்தப்பட்ட திணைக்களம் ஆராய்ந்து வருகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் குழந்தை பிறக்க முன்னரே தத்தெடுப்பவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் நிலையம் ஒன்றை நடாத்திவரும் பிரபலமான டாக்டர் ஒருவர் பற்றியும், சிறுவர் நல்லொழுக்க கமிஷனர் என்று கூறும் பணக்காரப் பெண் பற்றியும் விசாரணைகள் நடாத்த வேண்டும் என்று சிறுவர் பராமரிப்பு திணைக்களம் பொலிஸ் மா அதிபரைக் கேட்டுள்ளது.

கண்டியில் வறுமையான குடும்பத்துப் பெண்ணொருத்தியை கொழும்புக்கு, இலவசமாகச் சகல வசதிகளுடனும் பிள்ளைப்பேறு கவனிக்கப்படும் என்று ஆசை காட்டி அழைத்து வந்து குழந்தை பெற்றபின் குழந்தை காணமல் போய்விட்டது. இதுபற்றிய விசாரணைகளில் குழந்தை வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டது தெரியவந்துள்ளது. இந்த மாதிரியான சம்பவங்களில் குழந்தையின் தாயைச் சமாதானப்படுத்த சில யார் துணிகளும், ஆயிரம் ரூபாவும் கொடுக்கப்படுகின்றதாம். வறுமையில் வாழும் மக்களின் பிரச்சனைகளில் தலையிட்டு, அவர்களுக்கு ஆசையாக இருக்கும் ஒரே சொத்தான குழந்தைகளிலும் கை வைக்க அங்குள்ள அரசியல் செல்வாக்குள்ள பெரிய இடத்து மனிதர்கள் முனைந்துள்ளனர்.. இந்த துன்பகரமான நிலைக்கு மக்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வறுமைதான் காரணமாகிறது. குழந்தைகளை மேற்கு நாட்டவர்கள் ஏன் தத்தெடுக்கிறார்கள் என்ற உண்மைக் காரணம் புரியவில்லை. இந்தப் பாலகர்களின் எதிர்காலம் வெளிநாட்டில் எப்படி இருக்கிறது என்பது புரியாத புதிர். வெளிநாட்டில் இவ்வாறு தத்துப் பிள்ளையாக வளரும் இலங்கை குழந்தைகளின் உண்மை நிலையை யாராவது அறிந்து எழுதினால் மிகவும் நன்மையாக இருக்கும்.

* * * * * * * * * * *


**தொலைபேசித் தகவற் சேவை**

**ரொறன்ரோ கல்விச் சபை உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் பல்வேறு பாடத்திட்டங்களை வழங்குகிறது.**

***ஆரம்ப, உயர்கல்விப் பாடத்திட்டங்கள் (Elementary and High School programs)**
***பாலர் வகுப்புகள் (Kindergarten Classes)**
***இலவச ஆங்கிலக் கல்வி (Free English as a second Language classes)**
***மரபுவழி மொழிக் கல்வி (Heritage Language classes)**
***கோடைக்கால கல்வி (Summer School)**

பாடத்திட்டங்கள் பற்றி மேலதிக விபரங்களையும் ரொறன்ரோ பொதுப் பாடசாலை அமைப்பு சம்பந்தமான விபரங்களையும்,

322-2028

என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்



**322–2028**

**TORONTO BOARD OF EDUCATION**


"நாங்கள் விருப்பு வெறுப்புக்கு உட்படாதவர்கள்;நடுநிலையாளர்கள்" என்று விமர்சகர்கள் கூறுவதெல்லாம் வெறும் பொய்யானவை. அரசியலிலோ,இலக்கியத்திலோ,வேறெந்த விவகாரங்களிலோ நடுநிலைமை என்பது ஒன்றில்லை.நீதி,அநீதி என்ற இரண்டு புள்ளிகள் ஒன்றேடொன்று முட்டி நெருங்கிக்கொண்டு நிற்கின்றன.இடையே மூன்றாவது ஒரு புள்ளிக்கு இடமேயில்லை.

_டானியல்_

நன்றி:தூண்டில்



தேடியது........

## "புதிய பூமி எழுந்து வரட்டும்"

எமது போராட்டம் புனிதமானதும்,அளப்பரிய தியாகங்களின் மேலும் கட்டி யெழுப்பப்பட்டதாகும்.இப்போராட்டத்தை சரியான பாதையில் முன்னெடுத்துச் சென்று,எமது இலக்கை அடைவதே இந்தத் தியாகங்களுக்கு நாம் செலுத்தும் பெறுமதியாகும்.இனி மலரும் பொழுதுகளில் எமது மக்கள் ஒவ்வொருவரையும் போராட்டத்தை நேசித்து,வளர்த்துச் செல்லும் போராளிகளாக மாற்றுவதுடன்,ஒவ்வொரு உயிரையும் மதித்து வாழும் தன்மையை வளர்த்து,விடுதலையைப் பின்னடையச் செய்யும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாத வகையில் ஒரு புதிய உலகைப் படைப்போம்.ஒரு புதிய உலகைப் படைப்பதற்கு ஒரு "புதிய பூமி எழுந்து வரட்டும்" என்ற மார்கரேட் வாக்கர் என்பவரின் கவிதையை இங்கு தருகிறோம்.

எல்லா இடங்களிலும்
தங்கள் அடிமைப்பாடல்களை
ஒப்பாரிகளை சோககீதங்களை
மகிழ்ச்சிப் பாடல்களை
பாடிக் கொண்டிருக்கும்
எனது மக்களுக்காக.

மகிழ்ச்சியைப் பரப்பியபடி
கண்மூடித்தனமாகத் திரிகிற,
சோம்பேறித்தனத்தினால்
நேரத்தை பாழடிக்கிற,
பசியெடுக்கும்போது தூங்கிவிடுகிற,
நம்பிக்கை அற்றுப் போகும்போது,
குடிக்கிற
எனது மக்களுக்காக.

கண்ணுக்குப் புலப்படாமல்
எல்லா இடங்களிலும் ஏறிஉட்கார்ந்துகொண்டு
சிரிக்கிற ஜென்மங்களினால்
தங்களுக்குத் தாங்களே கட்டுப்பட்டு,
விலங்கிடப்பட்டு,
குழப்பி விடப்பட்டுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனது மக்களுக்காக.

குழப்பங்களிலிருந்தும்
இரட்டை வேடங்களிலிருந்தும்
தவருகப் புரிந்து கொள்ளலிலிருந்தும்
நல்ல வழிகளை உருவாக்க முயன்று
நிமிர்ந்து நின்று விழிக்கும்
எனது மக்களுக்காக.

எல்லா முகங்களையும்,எல்லா மக்களையும்
எல்லா ஆண்களையும், பெண்களையும்
அவர்களின் கணக்கிடமுடியாத தலைமுறைகளையும்
அணைத்துக் கொள்ளும் ஓர் உலகம்
படைக்க முயலும்
எனது மக்களுக்காக.

ஒரு புதியபூமி எழுந்து வரட்டும்
வேறொரு புதியஉலகம் பிறக்கட்டும்.

வானத்தில் அமைதி என்பது
அழகுறப் பொறிக்கப்படட்டும்.
அஞ்சாமை மிக்க ஓர் தலைமுறை
வெளிவரட்டும்
விடுதலை வேட்கை நிரம்பிய மக்கள் வளரட்டும்.

எதையும் குணப்படுத்தும் அழகும்
உறுதியுடன் பற்றிக் கொள்ளும் வலிமையும்
நம் இரத்தத்திலும்,உயிரிலும்
விடாமல் துடிக்கட்டும்.

மனிதன் எனும் ஓர் இனம் எழுந்துவந்து
அதிகாரத்தைக் கைப்பற்றட்டும்.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ நன்றி:தாகம்



# ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து !

_செழியன்_

மார்கழி 13

இரவு நேரம் எட்டுமணி இருக்குமென நினைக்கிறேன். நானும் பாலாவும் எமது கிராமத்துக்கு வந்ததும் பரதனைத் தேடிக் கொண்டு அவனது வீட்டுக்குச் சென்றோம்.

எங்களைக் கண்டதுதான் தாமதம் பதட்டத்துடன் எழுந்தோடி வந்தான். அதிர்ச்சியான செய்தியை அவன் எமக்கு கூறிமுடித்த போது அவனது பதட்டம் அதிகாரித்ததேயன்றி குறையவில்லை. பரதனுக்கு அச்செய்தியை கொண்டு வந்ததாக ....... இயக்கத்தைச் சேர்ந்த நண்பரை அறிமுகம் செய்துவைத்தான். அந்த நண்பர் கையில் ஒரு "கிரனேட்" டுடன் இருந்தார். முகம் எல்லாம் சோர்ந்து பீதிபடர்ந்திருந்தது.

ஈழத்தில் இருந்த இயக்கங்களை ஒவ்வொன்றுகத் தடைசெய்து கொண்டிருந்த"அந்த" இயக்கத்தவர்கள் சாவகச்சேரிப் பகுதியில் தமது இயக்கத்தின் முகாம்களை முற்றுகையிட்டிருப்பதாயும், இரு பகுதியினர்க்கும் துப்பாக்கிச் சண்டை இடைபெற்றுக் கொண்டிருப்பதாயும் அந்நண்பர் கூறினுர்.

சாவகச்சேரியில் ஆரம்பமான "அவர்களின்" முற்றுகை ஏனைய இடங்களுக்குப் பரவ முன்பே தமது முகாமில் இருந்த அனைத்து உறுப்பினர்களும் முகாமை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விட்டதாயும், இக்கிராமத்தில் தனக்கு பாதுகாப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வந்ததாய்க் கூறினுர்.

அவர் நினைத்ததைப் போல் இக்கிராமம் பாதுகாப்பானதல்ல. எங்களைத் தேடியும் "அவர்கள்" இனி எந்த நிமிடமும் இக்கிராமத்துக்கு வரக்கூடும் என்பதால் எங்கள் அனைவருக்குமே அந்த கிராமத்தில் இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் இனி ஆபத்துத்தான்.

போட்டியாக இருந்த கடைசி இயக்கமும் தடைசெய்யப்பட்ட பின் மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர்கள், தொழிற்சங்கப் பிரமுகர்கள், கவிஞர்கள்,என பலதரப்பட்டவர்களையும் "அவர்கள்"கைது செய்ய முற்படலாம் என நான் எதிர்பார்த்தேன்.

எமது கிராமத்தில் இருந்து தொழிற்சங்க வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கந்தசாமிக்கு ஒரு அழைப்புக் குரல் கொடுத்தோம். வேலிகளுக்கு இடையில் இருந்த "பொட்டு" வழியாக போர்வையைப் போர்த்தபடி கந்தசாமி வந்தார். அவருக்கும் செய்தியை கூறினேம். அவரும் அதிர்ச்சியடைந்தார்.

எமது அதிர்ச்சியையும், ஆராய்ச்சியையும் ஒரு புறம் வைத்துவிட்டு சில நிமிடம் தீவிர ஆலோசனை செய்தோம். எம்மைத்தேடி "அவர்கள்" எப்போதும் வந்துவிடுவார்கள் என்பதால் நாம் ஐந்து பேரும் அன்று இரவு வீடுகளை விட்டு வெளியேறி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அக்கிராமத்திலேயே விழித்திருப்பது என்றும் இச் செய்தியை அறிந்திருக்க முடியாத ஏனைய இடங்களில் உள்ள சில நண்பர்களுக்கு இச் செய்தியை உடன் அறிவிப்பதெனவும் முடிவு செய்தோம்.
யார் மூலமாக செய்தியை அனுப்பிவைப்பது என்ற சர்ச்சை வந்தபோது பெண்கள் மூலமாயும், சிறுவர்களுக்கூடாயுமே செய்தியை அனுப்பிவைப்பது புத்திசாலித்தனமானதாய் இருக்கும் என அச்சூழ்நிலையையொட்டி தீர்மானித்தோம். செய்தி கொண்டு செல்பவர்களும் ஆபத்தில் சிக்க நேரிடும் என்பது கவனத்திற்கு எடுக்கப்பட்டது. ஆனுல் எப்படி இருப்பினும் செய்தியை உரியவர்களுக்கும் அனுப்பிவைப்பது அவசியம் என்பதால் ஆபத்தினை கடந்து செய்தியை தெரிவிக்க ஒழுங்கு செய்தோம்.

மருத்துவமனைக்கு ஒரு பெண்ணை அநுமதிக்கக் கொண்டு செல்வது போல எனதும், கந்ததசாமி,பரதன் ஆகியோரது மனைவிமாருடன் கார் டிரைவராக கிராமத்து பெரியவர் மகாலிங்கண்ணரும் புறப்பட்டுச் சென்றனர். இன்னோர் பகுதிக்கு செய்தி தெரிவிக்க கிராமத்து மாணவர்கள் மூவர் உறவினர் வீட்டிற்குச் செல்வது போல புறப்பட்டுச் சென்றனர்.

இவர்கள் எல்லாம் சென்ற பின் நாம் அக்கிராமத்தில் ஒரு இடத்தில் அமர்ந்து விழித்துக் கொண்டிருந்தோம். சில விடயங்களைப் பற்றி மெதுவாக உரையாடிக் கொண்டபோதும் ஆழ்ந்த அமைதி அடிக்கடி நிலவியது.

நேரம் செல்லச் செல்ல நித்திரை வந்து எட்டி, எட்டிப்பார்த்துச் சென்றது. அது பின்னிரவுக் காலம். நிலவு வானத்தில் எழும்பத் தெடங்கியது. வெகுநேரமாய் எதுவுமே நிகழவில்லை. செய்தி கொண்டு சென்றவர்களும் இன்னமும் திரும்பி வந்து சேரவில்லை. அடிக்கடி சந்தேகங்கள் கூட முளைத்தன. இத்தகைய சஞ்சலங்களுக்கிடையில் நாம் ஊசலாடிக் கொண்டிருந்தோம்.

சற்றைக் கெல்லாம் எமது செய்தியை கொண்டு சென்ற கிராமத்துக் கார் மெல்ல ஊர்ந்து வந்து சேர்ந்தது. அவர்களிடமிருந்து செய்திகளை பெற்று வர அவர்களை நோக்கி பரதன் சென்றுன்.

காரில் சென்றவர்களை "அவர்கள்" துப்பாக்கியுடன் வழிமறித்து "இந்நேரத்தில் எங்கே செல்கிறீர்கள்" என விசாரணை செய்தனராம். சுகவீனம் போல் படுத்திருந்த பெண்ணைக் காட்டி "இவரை மருத்துவ மனைக்குக் கூட்டிக் கொண்டு செல்கிறோம்" எனக்கூறியதால் தொடர்ந்து செல்ல அநுமதியளிக்கப்பட்டதாம். தாம் சென்ற பிரதான வீதியில் அங்கும் இங்கும் என "அவர்கள்" வாகனங்களில் அவசரமாக திரிவதை காணக்கூடியதாயும் சில இடங்களில் துப்பாக்கிச் சூட்டு சத்தங்கள் கேட்டதாகவும் கூறினர்.

நாம் அனுப்பிவைத்த செய்தியை உரிய இடத்தில் தெரியப்படுத்திவிட்டே வந்திருந்தனர். அச்செய்தி கிடைக்கும்வரை நமது நண்பர்களுக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை. எமது செய்தி அவர்களை உசாரடையச் செய்துள்ளது.

சைக்கிளில் செய்தி கொண்டு சென்றவர்கள் செய்தியை தெரிவிக்க முடியாமல் தோல்வியுடன் வந்து சேர்ந்தனர் இவர்கள் சென்ற இடங்களில் ஏற்கனவே "அவர்கள்" துப்பாக்கியுடன் சுற்றிவளைத்து விட்டனராம் உள்ளே என்ன நடக்கிறது? என்பதைக்கூட அவதானிக்க முடியவில்லை என்றும் தொடர்ந்து அப்பகுதியில் நடமாடுவது தங்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதால் இவர்கள் பின்வாங்கி வந்துவிட்டனர்.

நேரம் நள்ளிரவை நெருங்கியது நிலவு நன்கு எழுந்து நிலவொளி விரிந்து படர்ந்தது நாம் ஐவரும் விழித்தே இருந்தோம். "அவர்கள்" வருவார்கள் என எமக்கு தெரிந்தது எப்போது? என்பது தான் எமக்குத் தெரியவில்லை. இத்தகைய மனநிலையில் ஆபத்தை எதிர்பார்த்து இருப்பது எமக்கு ஒரு புதிய அனுபவம். மனதில் அச்சமும், ஆவலும், படபடப்பும் நிறைந்து கிடந்தன.

(தொடரும்)



# மானிடக்கம்பங்கள்



வீதிகளில் நீவீர்
நிறுத்திய கம்பமாய்
நான்.

நான் தாங்கும் சுடர்
தருகிறது ஒளி
அது உன் கண்களில்
இருள் நீங்கத்தான் என்றுப்
புரித்தேன்.

இன்று என் உடல் தாங்குகிறது
உன் மானிட சடலத்தை
இதில் யாருக்குப்
புரிப்பு....?

ஒ.........!
புரிகிறது
உன்னிலும் கம்பங்கள்
மானிடக்கம்பங்கள்.

பா.அ.ஜயகரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கனிவுமில்லைக் கருணையுமில்லை

(தென்னாசியப் பிராந்திய அரசியலில் இந்தியாவின் பங்கு பற்றிய ஒரு கருத்து)

நன்றி; விஸ்வானந்ததேவன் நினைவுப் பேருரை;1

சி.சிவசேகரம்

இந்தியா ஒரு பிராந்திய வல்லரசு என்பது பற்றி இந்திய அரசின் சமீபகாலப் போக்கை அங்கீகரிப்போரும் மறுப்போரும் உடன் படுபவாரார்கள். இந்தியாவின் சனத்தொகையும் பூகோள பரிமாணமும். பொருளாதர வாய்ப்புகளும் அதனை ஒரு வலிய சர்வதேச அரசியல் பொருளாதர இராணுவ வல்லரசாக விருத்தி செய்யவல்லன. இந்தியாவின் விருத்தி அதன் அயல் உறவுகளை எவ்வாறு பாதிக்கின்றது என்பது தென்னாசியப் பிராந்திய அரசியலில் மிகவும் முக்கியமானது. நீண்ட காலப் பார்வையில் வரலாற்றின் முற்போக்குச் சக்திகளே வெற்றிபெறுவன எனினுங், குறுகியகாலப் பார்வையிலும் விடுதலை போராட்ட தந்திரோபாயங்களிலும் வல்லரசு அரசியல் பற்றித் தெளிவானதும் சரியானதுமான மதிப்பீடு அவசியம். உலகின் இருபெரு வல்லரசுகளினதும் அவர்களது சர்வதேச அரசியல் இராணுவ முகாங்களதும் போக்குகள் பற்றி நாம் அறிவோம். அவற்றின் செயற்பாடு பற்றியும் நிலைப்பாடு பற்றியும் ஓவ்வொருவரது அரசியல் நிலைப்பாட்டையும், உலக நோக்கையும் ஒட்டி அபிப்பிரயங்கள் வேறுபடலாம். ஆயினும் அவற்றின் போக்கை விளங்கிக் கொள்வதில் அரசியல் அவதானிகளுக்கு அதிகம் சிரமம் இராது. இந்தியா போன்ற பிராந்திய வல்லரசின் நிலை சிறிது சிக்கலானது. பொருளாதார விருத்திக்கான போராட்டத்தில் பன்னாட்டு நிறுவனங்களது ஆதிக்கத்தாலும் ஏகாதிபத்திய வாதிகளின் இடையுறுத சுரண்டலாலும் தலையீட்டாலும் முன்னேறமுடியாது திணறும் அளவிலும் பெருவல்லரசுகளின் சர்வதேச அரசியல் இழுபறியில் சிக்குண்டு தவிர்க்கும் சூழ்நிலைகளாலும் இந்தியா மூன்றாமுலக நாடுகளில் ஒன்றாகவுள்ளது. மறுபுறம் இந்திய சமுதாய மாற்றத்திற்கான புரட்சிகர எழுச்சியை ஒடுக்கும் தேவையையும், இந்திய எல்லைக்கு வெளியே தனி பொருளாதர ஆதிக்கத்தை விஸ்தரிக்கும் தேவையையும் கொண்ட ஒரு முதலாளி வர்க்கத்தின் அதிகாரத்துக்குட்பட்ட இந்திய அரசு தன் நலன்களைப் பேணுவதற்காகத் தன்னை ஒரு பிராந்திய வல்லரசாகவும் மேலாதிக்க சக்தியாகவும் நிறுவ முற்படுவதால், மற்றைய தென்னாசிய மூன்றாமுலக நாடுகளின் நலன்கட்கு விரோதமாக செயற்படுகிறது. இந்திய அரசின் நடத்தையை ஒருவர் வரவேற்பதோ எதிர்ப்பதோ அவரது சமுதாயப்பார்வையைப் பொறுத்த விஷயமெனினும், இந்திய அரசின் செயல்களை முற்போக்கான அரசியற் கோணத்தினின்று புறநிலை யதார்தமாக ஆராயவும் விளங்கிக்கொள்ளவும் இயலும். என்னுடைய நோக்கம் இந்திய துணைக்கண்டத்தின் ஒடுக்கப்பட்ட மக்களதும் நாடுகளதும் விடுதலைக்கும் விமோசனத்திற்கும் தொடர்பான முறையில் இப்பிராந்தியத்தில் இந்திய அரசின் அயல்விவகாரங்களைச் சுருக்கமாக ஆராய்வதே..

இந்திய மேலாதிக்க வாதம். இந்திய விஸ்தரிப்பு வாதம் போன்ற சொற்றொடர்கள் எவ்வளவு தவறாகவும் கவனயீனமாகவும் பிரயோகிக்கப்பட்டுக் கொச்சையாக விளக்கப்பட முடியும் என்பதற்கு 1968 1970இல் ஜே,வி,பி மலையகத் தமிழர்களை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கரங்களாக அடையாளங் கண்டது ஒரு நல்ல உதாரணம் இன்று இலங்கையில் இந்தியப் படைகள் நிற்பதன் நோக்கமும் நிற்கும் சூழ்நிலையும் இந்தியா இலங்கையைத் தன் நேரடியான இராணுவ அதிகாரத்தின் கீழ் கொண்டு வரும் முயற்சியே என்ற வாதமும் மாறாக இலங்கையில் இந்தியப் படைகள் அமைதிக்காக மட்டுமே நிற்கின்றன என்ற வாதமும் தவறானவை. முன்னைய வாதம் இந்தியா தன் விஸ்தரிப்பு வாத நோக்கத்தை எவ்வாறு செயற்படுத்துகின்றது என்று அறியாததன் விளைவு, பின்னையது இந்தியாவிற்கு விஸ்தரிப்பு நோக்கமே இல்லை என்ற பாசாங்கின் வெளிப்பாடு இவை இரண்டுமே ஆபத்தானவை. இந்திய அரசு, அதிகார வர்க்கம், ஆளுங்கட்சி, இந்திய மக்கள் அனைத்தையும் ஒன்றாக குழப்பிக்கொள்ளும் போக்கும் அரச இயந்திரத்தினுள்ளும். அதிகார வர்க்கதினுள்ளும் உள்ள முரண்பாடுகளைச் சரிவர விளங்கிக் கொள்ள இயலாமையும் இவ்வாறான தவறுகட்கு வழிவகுக்கின்றன. வர்க்க சமுதாயத்தில் வர்க்க அரசியலே அடிப்படையானது என்பதை உணராது அரசியல் இயக்கங்களிற் தனிமனிதர்களது பங்களிப்பை மிகைப்படுத்தும் வழக்கமும் இதற்கு உடந்தையாகிறது. தனி மனிதர்கள், வர்க்கங்களதும் இயக்கங்களதும். அவற்றின் போராட்டங்களதும் பிரதிநிதிகளாகவே செயற்படுகிறார்கள். மாற்றங்கள் அடிப்படையில் சமுதாய வரலாற்றுச் சூழ்நிலையின் விளைவாக ஏற்படுகின்றனவேயன்றித் தனி மனிதர்களது விருப்பங்களின் விளைவல்ல. தனிமனிதர்கள், தனித்தனியே வரலாற்றின் கையில் உள்ள சிறு கருவிகளேயன்றித் அதன் படைப்பாளிகள் அல்ல. வர்க்க சமுதாயத்தின் வரலாற்றை மனித சமுதாய வர்க்கங்களே நிகழ்த்தி விருத்தி செய்கின்றன. இந்தியா என்னும் பிராந்திய வல்லரசின் விருத்தியை இந்த அடிப்படையில் விளங்கிக் கொள்வதன் மூலமே தென்னாசிய மக்களது விடுதலைக்கும் விமோசனத்துக்குமான சக்திகள் இந்திய மேலாதிக்கவாதத்தையும், விஸ்தரிப்பு வாதத்தையும் சரிவர அடையாளங்கண்டு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமது போராட்டத்தைப் பலப்படுத்தி வெற்றியை உறுதிப்படுத்த முடியும்.

தென்னாசியாவில் பிரித்தானிய ஆதிக்கத்தின் சரிவையடுத்து இந்தியாவின் செல்வாக்கு எழிச்சி பெறும் வாய்ப்பு இருந்த போதும் இந்தியாவின் முதன்மைக்கு, அமெரிக்க சோவியத் பெருவல்லரசுகளிடையே பூகோள ஆதிக்கத்திற்காக இருந்து வந்த போட்டி தடையாக இருந்தது. அண்டைக்காலத்தில் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் பெருவல்லரசுகளின் போட்டியில் ஏற்பட்டுள்ள தளர்ச்சி இந்தியாவின் எழுச்சிக்கு வசதியேற்படுத்தியுள்ளது. இதன் முக்கியத்துவமும் ஒரு அரசியல் சூழலில் இந்தியா ஒரு பிராந்திய வல்லரசாக உருவான வரலாற்றுச் சூழ்நிலையையும் இதன் சம கால நிலையையும் எதிர்கால வாய்ப்புகளையும் மேற்கொண்டு அவதானிப்போம்.

இந்தியா எனப்படும் அரசியற் பூகோளப் பிரதேசம் பிரிட்டிஷார் இந்தியாவுக்குச் சுதந்திரம் தரும் வரை எந்த ஒரு சரித்திர காலத்திலும் ஒரு தனி நாடாகவோ அரசாகவோ சாம்ராஜயமாகவோ கூட இருந்ததில்லை.

அசோகனுடைய காலத்து மௌரியப் பேரரசு தென்னிந்தியாவிற் பெரும் பகுதியை உள்ளடக்கவில்லை. முகாலயப் பேரரசுகளும் இந்தியாவின் முழுப் பிரதேசத்தையும் ஆளவில்லை இத்தகைய பேரரசுகள் காலத்திற்குக் காலம் உலகின் பல வேறு பகுதிகளில் எழுந்தும் விழுந்தும் அழிந்தும் உள்ளன. ஆயினும் சமீப வரலாற்றில் ரஷ்யப் பேரரசு மட்டுமே நீடித்து ஒரு அரசியல் அமைப்பாகத் தொடர்ந்து இதனைச் சாத்தியமாக்கியது ஒக்டோபர் புரட்சியின் மகத்தான ஒரு சாதனை எனலாம். சீனாவில் பல் வேறு தேசிய இனங்கள் இருப்பினும், ஹான் இனத்தோரே மிகப் பெரும்பான்மை இனமாக (92 . சனத்தொகையினராக) இருப்பதாலும் சீனா விடுதலை ஏற்பட்ட அரசியற் சூழ்நிலையாலும், சீனா ஒரு தேசமாக எழுவதில் அதிக சிக்கல்கள் இருக்கவில்லை. ஐரோப்பாவையோ, லத்தீன் அமெரிக்காவையோ, அரபு நாடுகளையோ கறுப்பு இன ஆபிரிக்காவையோ, விடக்குறைந்த அளவிலேயே பொதுவான தேசிய குணம்சங்களையுடைய இந்தியப் பிரதேசம் பிரித்தானிய கொலனித்துவத்தினாலேயே ஒரு தேசமாக ஐக்கியப்படுத்தப்பட்டது. பிரித்தானிய ஆட்சியின் கீழும், இந்திய முழுவதும் கொலனித்துவ நிர்வாகத்தால் ஆளப்படவில்லை. இந்தியா எனப்படும் பிரதேசத்திற்குக் கலாச்சார ஒருமையையும் வரலாற்றுத் தொடர்ச்சியும் வழங்க எடுக்கப்பட்ட முயற்சிகள் இந்தோ ஆரிய கலாச்சார அடிப்படையில் அமைந்ததோடு இன, மத, மொழி அடிப்படையிலான வேறுபாடுகளைக் குறைவுபடுத்தும் முயற்சியின் போக்கில் சிறுபான்மைத் தேசிய இனங்களின் தனித்துவத்தையும் முக்கியத்துவத்தையும் அலட்சியம் செய்தன. சமஸ்கிருதமே இந்திய மொழிகளின் மூலமொழி என்று தவறான கருத்தும் அதன் அடிப்படையில் சமஸ்கிருதம் இந்தியாவின் தேசிய மொழியாக்கப்படவேண்டுமென்ற கருத்தும் பின்னர் இந்துஸ்தானி மொழி பெரும்பான்மையினரின் மொழி என்பதால் அதுவே தேசிய மொழியாக்கப்பட வேண்டுமென்ற கருத்தும் பலரது மொழிவழித் தேசிய உணர்வைப் புண்படுத்தியது. இந்தியாவின் தேசிய கலாச்சார ஒருமையை வேதகாலத்திற்கும் அதனின்று விருத்தியடைந்த இந்துக்கலாச்சாரத்திற்கும் தொடர்பு படுத்தியவர்கள் தம்மையறியாமலே பழைய இந்து முஸ்லிம் அரசர்களிடையான மோதல்களை நினைவூட்டி இந்து மத வெறியையும் இந்து ஆதிக்கம் பற்றிய முஸ்லிம்களின் அச்சத்தையும் வளர்க்க உதவினர். நால்வர்ண முறையின் மீது கட்டியெழுப்பப்பட்ட சாதி அமைப்பும் சாதி அடக்குமுறையும் இந்தியாவின் தேசிய ஒருமைக்கு எதிரான மிரட்டலாக அமையாவிடினும் ஐக்கியத்துவத்துக்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் கேடாகவே அமைந்தன. இவ்வாறான வேறுபாடுகளைப் பிரித்தானிய கொலனி ஆட்சி தன்னுடைய வசதிக்கேற்ப பயன்படுத்தியது கொலனித்துவ ஆட்சி முழு இந்தியா மீதும் நேரடியான அதிகாரம் செலுத்தாததோடு பிரதேசங்கள் முற்றிலும் மொழிவழி அடிப்படையில் நிறுவவோ நிர்வகிக்கவோ முனையவில்லை. சுதந்திரத்தன் பின் பிரித்தானியர்கள் ஆண்ட பிரதேசங்கள் மட்டுமன்றி இந்திய எல்லைக்குள் இருந்த சகல சமஸ்தானங்களையும் சிற்றரசுகளையும் இந்திய அரசின் இராணுவ பலத்தின் காரணமாகவே இந்திய ஒன்றியத்துள் இணைக்க முடிந்தது. அரசுகள் உடன்படாத சூழ்நிலைகளில் மிரட்டலும் படையெடுப்பும் பயன்படுத்தப்பட்டன. காஷ்மீர் அரசர் இந்து என்பதால் இஸ்லாமிய பெரும்பான்மையினர் பற்றியும் பாகிஸ்தான் பற்றியும் இருந்த அச்சங்களையிட்டு காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் கருத்துக்கு உடன்பட்டார். காஷ்மீரை மக்களது விருப்பங்கள் கணிப்பில் எடுக்கப்பட வேண்டும் என்ற பரவலான உலக அபிப்பிராயம் புறக்கணிக்கப்பட்டது. பாக்கிஸ்தான் படையெடுப்பு காஷ்மீரின் ஒரு பகுதியை இந்தியாப் பிடியினின்று மீட்டபோதும் காஷ்மீர் பிரச்சனையைத் தீர்க்க உதவவில்லை. இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் இருந்த நேபாளமும், பூட்டானும் சிக்கிமும் இந்தியாவுக்குள் இணைக்கப்படாத போதும் இவற்றின் பூகோள அமைப்புக் காரணமாகவும் வரலாற்று நிர்ப்பந்தங்களாலும் இந்தியாவின் பொருளாதார அரசியல் ஆதிக்கத்துக்குட்பட நேர்ந்தது.

இந்தியாவின் தேசியத் தன்மையை அடையாளங் காட்டவும், ஒருமயப்படுத்தவும் பிரித்தானிய கொலனித்துவ ஆட்சியையும் சுதந்திரப் போராட்டத்தையும் விடப் பெரிதாகவும், வலிதாகவும் எதுவும் இருக்கவில்லை. இந்தியைத் தேசியப் பொது மொழியாக ஏற்கவேண்டும் என்ற கருத்து சுதந்திரப் போரட்டத்தின்போது ஓரளவு பரவலான அங்கீகாரத்தைப் பெற்றது. விடுதலையையடுத்து, இந்தியைப் பிறமொழி பேசுவோர் மீது திணிக்கும் முயற்சியாகவே பேரினவாதிகள் இதைக் கருதினர். மறுபுறம் இந்தி பேசாதோரின் தேசிய உணர்வுகள் தமது மொழி உரிமைகட்காகக் கிளர்ந்து எழுந்தன. இதன் விளைவாக ஆங்கிலமே இன்னமும் இந்தியாவின் இணைப்பு மொழியாகத் தொடர்கிறது. பாக்கிஸ்த்தான் பிரிவினை இந்து முஸ்லிம் பகைமையை மேலும் வளர்த்தபோதும், இந்தியா மதச்சார்பற்ற நாடாக இருக்குமென்ற உறுதிமொழி காரணமாக, பாக்கிஸ்தான் எல்லை மாகாணங்கள் தவிர்ந்த பிற மாநிலங்களின் முஸ்லிம்கள் அனைவரும் இந்திய ஒன்றியத்திலேயே தொடர்ந்து வாழ முடியும் என்று நம்பினர். இந்து மதவெறியைப் பெருவாரியான அரசியற் கட்சிகள் நிராகரித்தபோதும் இந்து





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதவெறியை அடிப்படையாகக் கொண்ட அரசியற் கட்சிகள் சில அண்மைக்காலமாக வளர்ந்து வந்துள்ளதோடு பிரதான பாராளுமன்ற அரசியற் கட்சிகளில் (மாக்ஸிய அரசியற் கட்சிகள் நீங்கலாக) இந்து மத வெறிக்கு வளைந்து கொடுக்கும் சந்தர்ப்பவாதப் போக்கு வளர்ந்துள்ளது. சீக்கிய மக்களது தேசியத்தன்மை மத அடிப்படையிலானது என்ற காரணத்தால், சீக்கியர் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக் கப்படததாலும் அவர்களுக்கென ஒரு மாநிலம் உருவாக்கப்படாததாலும் இந்து சீக்கிய மோதல் இன்றைய பயங்கரவாத நிலைக்கு வந்துள்ளது. இவ்வாறு சாதிப் பூச்சல்களும் சாதி அடக்கு முறையும் ஒவ்வொரு மாநிலத்திலும் பெருகிவருகின்றன.

காங்கிரஸ் ஆட்சி, மதம், மொழி, சாதி வேறுபாடற்றுச் சட்டத்தின் மூலம் சமத்துவம் பேணுங் கொள்கையைப் பிரகடனம் செய்த போதும், ஆளும் தேசிய முதலாளி வர்க்கமும் காங்கிரஸ் ஆட்சிதொடர்வதற்கு அவசியமான கிராமிய நிலவுடமை வர்க்கமும் சாதி அடக்கு முறையும் மதவெறியை மொழிவெறியை ஒழிக்கத் தயாராக இல்லை. சாதி, மொழி, மதவெறிகள் மாறிவரும் அரசியற் சூழ்நிலைகளில், வெவ்வேறு புதிய வடிவங்களில் தமது அரசியல் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

நூற்றுக்கணக்கான மொழிகளும் கிளை மொழிகளும் தேசிய இனப்பிரிவுகளும் உள்ள ஒரு பெரும் பிரதேசத்தின் தேசிய ஒருமைப்பாடு சமத்துவத்தினதும் சகிப்புத் தன்மையினதும் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட முடியும். பிரதானமான தேசிய இனங்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகள் ஒருபுறமிருக்க இந்தியாவின் பூர்வகுடிகளின் உரிமைகள் படிப்படியாக நிலவுடமை வர்க்கத்தாலும் முதலாளித்துவ சரண்டலாலும் பறிக்கப்பட்டு வருகின்றன. பிளவும், பிரிவினையும் இந்தியாவின் சகல மக்களதும் நலனுக்கு விரோதமானவை. எனினும் அடிப்படையான சமுதாய முரண்பாடுகளை தீர்க்கத் தயாராக இல்லாத ஆளும் வர்க்கம் இந்தியாவின் ஒற்றுமைக்கு ஒரு முக்கிய எதிரியாக உள்ளது. இந்த ஆளும் வர்க்கம் பொருளாதார இராணுவ அரசியல் பலம் மிக்க பிராந்திய வல்லரசாக இந்தியாவை நிறுவவும் அதன்மூலம் இந்தியாவின் உள்ளும் வெளியிலும் தன்னை மேலும் ஸ்திரப்படுத்தவும் முனைகிறது.

சகல தேசிய இனங்கள் மத்தியிலும் மதங்கள் மத்தியிலும் சமத்துவம் சாதி வேறுபாடின்மை போன்ற இலக்குகளை ஒரு சுரண்டற் சமுதாயத்தில் சுரண்டும் வர்க்க ஆட்சியாளர் சாதிக்கமுடியாது. எனவே இந்தியாவின் ஆளும் வர்க்கம் ஒரு மேலெழுந்த வாரியான தேசிய ஒற்றுமையை அரசு வலிமை மூலம் பேணவும் தன் செல்வாக்கை இந்தியத் துணைக்கண்ட பிராந்தியத்தில் விஸ்தரிக்கவும் முற்படும் போது அதற்கு வழிகாட்டியாக அதன் முன்னோடியான பிரித்தானிய இந்திய ராஜ்யமே அமைந்தமை தற்செயலானதல்ல. புதிய சாஹிப்கள் பழைய சாஹிப்களின் இடத்தைப் பிடித்துப் பழைய இடைவெளிகளை நிரப்ப முயல்கிறார்களே ஒழியப் புதிய சமுதாயத்தை அமைக்க விரும்பவில்லை.

3; கொலனித்துவத்தின் கீழ் நூற்றாண்டு காலமாக அனுபவித்த சிறுமைகளும் பாகிஸ்தான் பிரிவினை தேசியப் பெருமிதத்துக்கு இழைத்த ஊறும் தொடர்ந்தும் ஏகாதிபத்தியச் சரணடைவுக்கும் ஆதிக்கத்துக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் தேசிய முதலாளித்துவத்தை ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் இணைத்தபோதும், அதன் வர்க்க நலன்கள் பிரித்தானிய கொலனித்துவம் விட்டுச் சென்ற பூகோள அரசியல் அமைப்பை கேள்வியின்றித் தனக்குச் சாதகமாக பயன்படுத்துமாறு தூண்டின. இதன் விளைவாகவே இந்தியாவிக்கும் அண்டைய நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சனைகள் நீடித்தன. பாக்கிஸ்தானுடனுன பிரச்சனை காஷ்மீர் விடயத்தில் மட்டுமின்றி பிற எல்லைகளிலும் இருந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பேச்சுவார்த்தைகளை இழுத்து நீடிப்பதும் தாமதிப்பதும் பிரச்சனையை அலட்சியம் செய்வதுமே நடைமுறையாக இருந்தது. இதன் விளைவாகவே சீன இந்திய எல்லையில் சீனப்படையெடுப்பு நிகழ்ந்தது.

பாண்டுங் நாட்டில் பஞ்சசீலக் கொள்கை முன்வைக்கப்பட்ட சூழ்நிலையில் இந்திய நாடுகளின் சமத்துவத்தையும் சுயாதீனத்தையும் உள்விவகாரங்களிற் தலையிடாமையையும் வலியுறித்தியது. காலப்போக்கில் இந்த சமத்துவம் இந்தியாவினும் வலிய அல்லது அதற்குச் சமவலுமையுடைய நாடுகட்கும் இந்தியாவுக்கும் இடையிலான சமத்துவமாக காணப்பட்டதேயொழிய இந்தியாவிற்கும் அதன் அயலில் உள்ள வலிமைகுறைந்து நாடுகளுக்கும் இடையிலானதாகக் காணப்படவில்லை.

அணிசேரா நாடுகளின் மத்தியில் இந்தியாவின் முக்கியத்துவம் அந்த குழுவில் சீனவும் பாக்கிஸ்தானும் முறையே சோவியத்யூனியனுடனும் அமெரிக்காவுடனும் இருந்து நடைமுறையற்றுப்போன உடன் படிக்கைகள் காரணமாகச் சேரமுடியாமையால் ஓங்கியது. இந்திய அணிசேரா இயக்கத்தை தன் சர்வதேசச் செல்வாக்கை உயர்த்தப் பயன்படுத்தியது இயல்பானது. அங்கும் பொது நல நாடுகளிடையும் இந்தியா பரந்து பட்ட அளவில் நிற வெறிக்கும் கொலனித்துவத்துக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகக் குரலெழுப்பிய போதும் குறிப்பான பிரச்சனைகளில் இந்தியாவின் தேசிய முதலாளித்துவ நலன்களைச் சார்ந்ததாகவே இந்தியாவின் நிலைப்பாடு அமைந்திருந்தது.

நேரடியாக இந்தியா சார்ந்த பிரச்சனைகளைக் கணிப்பிலெடுப்போமாயின் இந்தியா காஷ்மீர் பிரச்சனையில் நீண்ட காலமாகவே காஷ்மீர மக்களின் அபிப்பிராயத்தை கணிப்பிலெடுக்க மறுத்ததோடு இந்தியாவுடன் இணையமறுத்துக், காஷ்மீர சுதந்திரத்தை விரும்பிய பெரும்பான்மையினரின் பிரதிநிதிகளை கொடுமைக்கு உட்படுத்தியது.

சீன இந்திய எல்லைத்தகராறு யுத்தமாக வெடித்து இந்தியா பின்வாங்க நேரிட்டுச் சீனத்துருப்புக்கள் தாம் கைப்பற்றிய பிரதேசத்தில் நின்று தாமாகவே வெளியேறி பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்ததையடுத்தே இந்தியா தன் அயல் உறவுகளில் ஒரு தெளிவான நிலைப்பாட்டையும் நிச்சயமான முடிவுகளையும் நாடியது. குருசேவின் தலைமையின் கீழ் சோவியத் யூனியன்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீனவுடனான உறவின் சீர்குலைவுக்கு வழியேற்படுத்தியது. அமெரிக்கா பாக்கிஸ்தான் நெருக்கம் காரணமாக சோவியத்யூனியன் இந்தியாவின் நட்பை விரும்பியது. சோவியத் சீன உறவின் சீர்குலைவை பயன்படுத்தி இந்தியா சோவியத் யூனியனுடான உறவை மேலும் வலுப்படுத்த முற்பட்டது. இதன் விளைவாக இந்தியா பிராந்திய வல்லரசான நாடாக விருத்தியடையும் தேவைக்கு ஒரு ஆதரவு கிடைத்தது. சோவியத் யூனியனுக்குத் தென்னாசியப் பிராந்தியத்தில் ஒரு நேச சக்தியும் சீனவுடனான அதன் முரண்பாட்டிற் பயன்படுத்த வசதியான ஒரு கருவியும் கிடைத்தன. சீனவுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையிலான நல்லுறவு சீனவுக்கு எதிராக பாக்கிஸ்த்தானை அமெரிக்கா பயன்படுத்த முடியாதவாறு பாக்கிஸ்தான் சியாட்டோவில் செயற்பட்ட காலத்திலிருந்தே விருத்தியடைந்த போதும், சோவியத் இந்திய நேச உறவால் மேலும் பல மடைந்தது.

சோவியத் யூனியனின் ஆதரவு முன்னர் இந்தியா மேற்கொள்ளத்தயங்கிய விஸ்த்தரிப்பு நடவடிக்கைகளைய,ம் அயல் விவகாரங்களில் தலையீட்டையும் சாத்தியமாக்கியது.குருஷேவ்வின் கீழ் ஏகாதிபத்தியப் பெருவல்லரசான அமெரிக்காவ,டனான உறவ,, சமரசம்,சமாதான சக ஜீவனம் என்ற போர்வையின்கீழ் நடத்தப்போதும் அமெரிக்காவுக்குச் சமமான ஒரு இராணுவ சக்தியாக மட்டுமன்றி சர்வதேச அரசியல் மேலாதிக்க சக்தியாகவும் சோவித்யூனியனை விஸ்த்தரிக்கும் நடவடிக்கை தொடர்ந்தது.சோவித்யூனியன் சோசலிச நாடுகளுட்கு ஒரு முன்னுதாரணம் என்றவகையிலின்றி சோசலிச முகாமினுள் நிபந்தனைக்கும் கேள்விக்கும் அப்பாற்பட்ட தலைமை நாடாக கருதப்படவும் அதே வேளை சோவியத் நலன்களைப் பேணும் வகையில் சர்வதேச உறவுகளையும் ஏகாதிபத்திய விரோதப் போராட்டங்களையும் பயன்படுத்தவும் விழைந்தது பிரேஷ்னேவின் கீழ் இப் போக்கு விருத்தி பெற்று சோவியத்யூனியனை ஒரு இராணுவ வல்லரசாகவும் அமெரிக்காவுடன் உலகின் மேலாதிக்கத்தைப் பங்குபோடும் ஒரு மகா வல்லரசாகவும் கண்டது.எனவே அமெரிக்காவுக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடிய நாடுகளைச் சோவியத்யூனியன் தன் அணைப்பிற்குட் கொண்டுவர முற்பட்டது.இந்திய சோவியத் உறவில் ஏற்பட்ட இந்தப் புதிய திருப்பம் இரண்டு நாடுகளதும் மேலாதிக நோக்கங்களுக்கு உடந்தையாக அமைந்தது.

இந்தச் சூழ்நிலையிலேயே இந்தியா தன் அயலில் உள்ள பகைமையான நாடுகளைப் பலவீனப்படுத்தவும் வலிமை குறைந்த நாடுகள் மீது தன் ஆதிக்கத்தை மேம்படுத்தவும் முற்பட்டது. (தொடரும்)

பின் அட்டைப் புகைப்படங்கள்

மேல் : ஏ.டி.அன்ரு
கீழ் : தமயந்தி



# தனிமை



நிழல் மட்டுமே
துணையான தனிமை...
சுற்றி வரக்
காடுகள் மனிதர்களாக...
முட்களாய் குத்தும் உறவுகள்..
நான் தனிமையில்..
வெறுமையாக...
என்றோ தொலைந்து போன
என்னைத் தேட
விரும்பாத உறவுகள்..
அன்புக்காக
ஏங்கி நின்ற தேடலில்....
தாய்..
காதலி....
நட்பு...
மண்....
நேசித்த எல்லாமே
பொய்மையின் நிஜங்கள்..

உயிர்கள் கைகளிலே!
உறவுகள் எப்படித் தொடரும்?

சிரிப்பதற்கு சேரும்
சொந்தங்கள்..
அழும்போது மட்டும்
மறக்கப்படும்....

எது நிஜம்?
நான் நானக...
எது உறவு?
எனக்கு நான்....
எதைத் தேடி?
எனக்குள்ளே என்னை...


வெறும் சடங்களில்
சமுத்திரத்தில்
நான்
தனிமையில் வெறுமையாக.....

எப்போது
என்னை அன்பு
துளிர்க்க வைக்கும்?

ஜோர்ஜ்.இ.குருஷேவ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாழ்வின் ஏற்றத்திற்காய் புதிய படிகள் கடக்கப்படும்



நாளை ஏக்கமும் தவிப்பும் நீக்கப்படும்